தென்மொழி

விடுதலையே வேண்டும்!

ஒட்டென்றும் ஒருமையென்றும் உறவாடும்
வடவனுயர் கதவை நாளும்
தட்டென்று தட்டுகின்றீர்! தரும்பொருளால்
தமிழரசை நடத்து கின்றீர்!
மட்டென்று மதித்தீரோ நந்தமிழர்
மானத்தை! மறக்கூட் டத்தை!
வெட்டொன்று துண்டிரண்டாய் "விடுதலையே
வேண்டும்" என விளம்பு வீரே!

சுவடி: ௫; ஓலை: ௬. கடகம் (ஆடி) ௧௯௯௮.

தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்

ரூ0 50 காசு

நமக்கு வந்த மடல்கள் :

O தென்மொழிபால் யான் கொண்டுள்ள பற்றும் அதன் ஆசிரியராகிய உங்கள்பால் வைத்துள்ள மதிப்பும் அளவிடற்கரியன. எனினும் உங்கள் தமிழ்த் தொண்டும் நம்மிதழின் பணியும் பயன்படாமல் வீணாகிவிடுமோ என்று எண்ணி அடிக்கடி யான் நெஞ்சக் கண்ணீர் வடிக்கிறேன். யான் கீழ்க்காட்டும் காரணங்களைச் சற்று நீங்கள் ஓர்ந்து பார்ப்பின் என்னிலை உங்களுக்குப் புலனாகும்.

'கல்கண்டு', 'குமுதம்' 'கல்கி' 'ஆனந்தவிகடன்' போலும் கிழமை இதழ்கள் செய்துவரும் 'தமிழ்ச் சாகடிப்பை'யும், 'தினத்தந்தி' 'தினமணி' போலும் நாளிதழ்கள் அவிழ்த்துவிடும் புன்சொற்களையும், திங்கட்கு ஒருமுறை வெளிவரும் 'தென்மொழி' எதிர்த்து வெற்றி காணல் ஒல்லுமா? 'தென்மொழி அன்பர்' என்று நீங்கள் மெச்சும் தமிழ்த் தொண்டரில் பல்லோர் தனித்தமிழில் பேசுவது இல்லை என்பதை நீங்கள் அறிவீர்களா? தமிழுக்கு அரணாக இருக்க வேண்டிய தமிழாசிரியர் (அவருள் பெரும்பாலோர் பார்ப்பனர்) வகுப்புகளில் கலப்பு நடையைக் கைக்கொள்ளுவது உங்களுக்குத் தெரியுமா? 'இந்தி எதிர்ப்பு மறவர்' என்று சொன்னே பழிச்சப்படும் மாணவ மணிகளின் கைகளில் இருப்பன 'குமுதம்' 'கல்கண்டு' போல்வனவே அன்றித் 'தென்மொழி' அன்று என்பதை நீங்கள் உணர்வீர்களா? அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர் படிப்பது 'ஆனந்தவிகடன்' என்று அண்மையில் ஒரு பொத்தகத்தில் படித்தேன். 'ஆனந்த விகடனை'ப் படிப்போர் தமிழை எத்துணை இழிவாகக் கருதுவர்? (ஆனந்த விகடன் தமிழ்ச்சாகடிப்பு செய்வதால்). இறுதியாகத், தமிழாசிரியரே இந்தி பரப்புக் கூட்டங்களில் பேசுவதையும், 'தென்மொழி' போலும் மறுமலர்ச்சி ஏடுகளுக்கு எதிராக அரசுத் துணையுடன் (Support) ஒரு பார்ப்பனக் கும்பலே மறைமுகமாக இயங்குவதையும் நீங்கள் உணரல் வேண்டும்.

நம்மியக்கம் வளர வழிகள்:

(1) தற்பொழுதைய நிலையில் தமிழைக் காத்தல் போதும்; விடுதலை பின்னர் பார்க்கலாம். ('தென்மொழி' நின்று விடின் தென்மொழி அன்பர் சோர்ந்து விடுவர்)

(2) ஆங்காங்கே உள்ள தனித்தமிழ் இயக்க (அதன் மாநாடு சென்ற ஆண்டு திருச்சியில் நடந்தது) மன்றங்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு உங்கள் வினைகளை விரைவிப்பது.

(3) தென்மொழியில் நன்னடையில் உயர்ந்த சிறுகதைகள், புதினங்கள் போல்வனவற்றை எழுதி அதன் விற்பனையை மிகுவிப்பது. ('ஐயை' ஆக்கிய நீங்களே அழகான புதினம் எழுத வேண்டுகிறேன்.)

(4) தனித் தமிழன்பர் அரசியல், திரைப்படம், சமயம் போலும் பல்துறைகளில் புகுந்து தமிழுயர்வுக்குப் பாடுபடுவது.

(5) பாவாணர், ஆட்சி மொழிக்காவலர் போன்றோரின் புலமையை முழுவதும் பயன்படுத்திப் புதுச் சொற்களைப் புனைவது.

(6) 'தென்மொழி' கிழமை இதழாக்கப்படுவது.

(தொடர்ச்சி 3-ம் அட்டைப் பக்கம்).



தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே

சுவடி-5 :: ஓலை-6

கடகம் (ஆடி) தி. பி. ௧௯௯௮ (1967–சூலை)

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்:– தங்கப்பா

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1

தமிழக அரசு



இந்திய நாட்டு விடுதலைக்குப் பின் கடந்த இருபதாண்டுக் காலப் பேராயக் கட்சியின் ஆளுகையில், தமிழகம பெற்ற முன்னேற்றம் எந்த அளவினதோ, அந்த அளவினது அது பெற்ற துயரமும். புறத்தே பார்ப்பவர்க்குத் தொழில் துறையிலும், கல்வித் துறையிலும், குமுகாயத் துறையிலும தமிழகம் ஓரளவு முன்னேற்றம் பெற்றிருப்பதாகத் தோன்றினாலும், அகத்தே நோக்குவார்க்கு அம் முன்னேற்றங்கள் யாவும் அடிமைக்குப் பூட்டிய அணிகலன்களாகவே தோற்றமளிப்பன. மொழியுரிமையற்ற கல்வி, ஏழைகளால் எட்டிப்பிடிக்க முடியாத தொழில் வளம், பொதுவுடைமை சாராத பொருள் வளர்ச்சி,

இழிவு போக்கப்படாத மக்கள்நலம் போன்ற குறையும் கறையும் சேர்ந்த வளர்ச்சிகளே கடந்தகால அரசியல் வரலாற்றில் நிரப்பி யிருந்தன. வானளாவிக் கிடந்த ஆயிரக்கணக்கான வளமனைகள், நிலத்தோடு நிலமாகப் படுத்துக் கிடந்த பல்லாயிரக் கணக்கான குடிசைகளை மறைத்து நின்றன. எதிரும் புதிருமாக இரைச்சலிட்டு ஓடிக் கொண்டிருக்கும் இயங்கிகளின் பேரிரைச்சலிலும், பெரும் புழுதி யிலும், ஏழை மக்களிட்ட கூக்குரலும் கூனற்பார்வையும் மறைந்து போயின. கல்லூரிக் கல்வியும், வெளிநாட்டுப் படிப்பும் மிகுந்த செல்வப்பிள்ளைகளின் ஆரவார முன்னேற்ற நாகரிகத்தின் அடிப் படியில், தொடக்க நிலைக் கல்வியும் வாயாத எண்ணற்ற ஏழைப் பிள்ளைகளின் சாக்கூச்சல்கள் தவிடுபொடியாயின. வானை முட்டி நிற்கும் தொழிற்சாலைகளின் இரைச்சலிலும், புகை மூட்டத்திலும், முன்னேற்றத்தைக் கனவிலும் கண்டறியாத கணக்கற்ற ஏழைத் தொழிலாளிகளின் மென்குரலும், மேனிவறட்சியும் புதைந்து போயின. ஒருமைப்பாடு என்னும் ஏமாற்றுக் கொள்கையில் எழுந்த இந்தியின் கொடுங்கைகள், தாய்மொழியினையும் சரிவர உணராத தமிழர் கூட்டத்தின் குரல்வளைகளை நெரித்துக் கொண்டிருந்தன. நிகரமை, நிகரமை என்று முழக்கமிட்ட வாய்ப்பாறையின் வல்லொலியுள், நிமிர்த்தெமை, நிமிர்த்தெமை என்று கூக்குரலிட்ட பாட்டாளி மக்க ளின் எலும்பு நெரிசல்கள் தேய்ந்து ஒடுங்கின. மொத்தத்தில் பேராயக் கட்சியின் கைநூற் சட்டைப் பைக்குள், அக்கட்சியில் இருக்கும நல்லோர் ஒரு சிலரின் நன்னம்பிக்கைகளும், ஒரு சில நற்செய் கைகளும் அவற்றின் முழுப்பலன்களும் போய் அடைப்புண்டன. தில்லியின் ஆளுகைக்கும், பார்ப்பனரின் ஏமாற்றுக்கும், பெரும்பெரும் முதலாளிகளின் கொழுத்த கொள்ளையடிப்புக்கும் தமிழகம் விளை நிலமா யிருந்தது.

ஆளத்தெரியாத பக்தவத்சலங்களும், அத்தகையோரின் சூழ்ச்சிப் பிடிக்குள் சிக்கி மீளத்தெரியாத காமராசுகளும் தமிழ் நிலத்தைக் கவருட்ட அரங்கமாக்கித், தமிழர்களைக் காய்களாக்கி, அரசியல் வட்டாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். தமிழர் நலம் பேணுவோரைப் பேராயக் கட்சியில் துருவித் தேடிக் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. தமிழ் மொழிக்கு நலஞ்சேர்ப்பாரைப் பேராயக் கட்சிக்குள் வலை போட்டுத் தேடவேண்டுவதாக இருந்தது. அதிகார வெறியும் பதவிப் பித்தமும் ஏறுத பேராயக் கட்சி மண்டைகளை விரல்விட்டு எண்ண

வேண்டியிருந்தது. எங்குப் பார்த்தாலும், அள(!)கேசன்களும், மன்ருடிகளும், சுப்பிரமணி(!)யன்களும், அல்லது ஆனந்தவிகடன்களும், தி. வி. சுந்தரங்களுமாகவே காட்சியளித்தனர். இவர்களுக்கிடையில் காமராசர் போன்றவர்கள் இருந்துகொண்டு வடநாட்டுப் பேயர்களுக்கு அணையாகவும், தமிழர்களுக்குப் புணையாகவும் இருந்து எதிர் காலத்தை நோக்கி அரசியலை நடத்திக்காட்ட வேண்டியிருந்தது. நாளொரு கோயிலும் பொழுதொரு படையலுமாகத் திரிந்த பக்தவத்சலம் போன்றவர்கள் முதுகரிக்கும் மூட்டைப் பூச்சிகளாக இருந்து, காமராசரின் அரசியல் முதுகை அரித்துத் தமிழ் அரத்தத்தை—உறிஞ்சிக்குடித்துக் கொண்டிருந்தனர்.

உள்ளார்ந்த நிலை ஒருவாறு இப்படி இருந்தபோதிலும், பேராயக் கட்சியால் தமிழகத்திற்கு ஓரளவு நன்மை விளைவதற்குக் காரணமாயிருந்தவர் திரு. காமராசர். அவர் இந்தியப் பேராயக் கட்சியின் தலைவராக இருந்தபடியால், தமிழக வளர்ச்சிக்குத் தில்லியரசு தடையாக இல்லாமல் இருக்க வேண்டிய கட்டாயம் ஒன்று இருந்தது. இருப்பினும் அவர் ஒருவர்க்கும்கூட சரியான துணையில்லாமல் இருந்ததால், அவர் எண்ணித்துணிந்த செயல்கள் யாவினும் இடையிடையே ஓட்டையும் விரிசலும் விழத் தொடங்கின. தமிழக அளவிலும், இந்திய அளவிலும் விழத் தொடங்கிய இவ்வோட்டைகளையும், விரிசல்களையும் பார்த்து அடைக்கவும் இணைக்கவும் ஒருவராலும் முடியாமல் இருந்தது. கடந்த தேர்தலில் அவருக்கும் அவர் கட்சிக்கும் வெற்றி கிடைத்திருக்குமானால், தமிழக அரசியல் அமைப்பே மாறியிருக்கும். ஆனால் இயற்கையின் தேர்வுநிலை (Survival) வேறு வகையாக இருந்தது. இதனால் எதிர்ப்பட்ட எல்லா விளைவுகளையும் எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. தமிழ்ப் பகைவர் திரு. பக்தவத்சலம் அமைத்து ஆண்ட அமைச்சரவை தமிழ்த்துணைவர் திரு. அண்ணாத்துரை அவர்களின் கைகளுக்கு இக்கால் மாறியிருப்பதும் அரசியல் கூர்தலற (பரிணாம) வளர்ச்சியையே காட்டும். எனவே காலத்தாலும் கருத்தாலும் மாற்றப்பட்ட இவ்வரசியல் மாற்றங்குறித்து நாமும் ஆழ்ந்து எண்ண வேண்டுவதாயிற்று.

அரசியலைப் பொறுத்த மட்டில் ஓர் உண்மையை எவரும் மறந்துவிடக்கூடாது. அரசியல் வெற்றிக்கு உண்மையான அறிவுத் திறத்தையும் முனைப்பாற்றலையும் விட, திண்மையான சூழ்ச்சித் திறமும்,

அமைந்துபோதலுமே மிகுதியும் வேண்டுவதாகும். அவற்ருல்தாம் பேராயக்கட்சி இதுநாள்வரை இருந்து வந்தது; இன்றும் இருக்கவும் இருக்கின்றது. இந்தத் தேர்தலில் அரசியல் சாணக்கியர், – சூழ்ச்சி நரி திரு. இராசாசியின் மூளைத்திறம் முற்றிலும் பயன்படுத்தப்பட்ட தாலேயே, பேராயக் கட்சியின் சூழ்ச்சியும் கரவும் தோற்கடிக்கப்பட் டன. ஆனால் திரு. இராசாசியின் மூளைத்திறத்தைவிட திரு. அண்ணுத் துரை அவர்களின் மூளைத்திறம் இன்னும் சிறந்து விளங்கியதால், இராசாசியைக் கொண்டே தாமும் ஓர் அமைச்சரவையை அமைத்துக் கொள்ள அவரால் முடிந்தது. திரு. இராசாசியின் சூழ்ச்சி வலைக்குள் சிக்காத முன்னறிவுக்காகவும், அவரை நன்கு பயன்படுத்திக் கொண்ட கால வினைத் தேர்ச்சிக்காகவும் உயர் திரு. அண்ணுத்துரை அவர்களை நாமும் பாராட்டுகின்ருேம். ஆனல் வீழ இருந்த திரு. அண்ணுத்துரை அவர்களையும் அவர் அமைச்சரவையையும், தக்க பொழுதில் தடுத்தாட் கொண்ட பெரியார் அவர்களை எவ்வளவு பாராட்டினுலும் தவறில்லை. எதிர்கால வரலாற்றில் தமிழர்கள் எவ்வாறு அரசியலில் இயங்குதல் வேண்டும் என்பதற்கு இஃதொரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

எஃது எப்படியாயினும் இக்கால் அமைந்துள்ள தமிழக அமைச்ச ரவைக்குப் பல தேர்வுகள் காத்துக் கிடக்கின்றன. அரசியல், பொரு ளியல், குமுகாய அடிப்படைகளிலும், கல்வி, தொழில், மொழி பண் பாடு முதலிய துறைகளிலும் தமிழக அரசு செய்யவேண்டிய பணிகள் ஏராளம். பொதுவுடைமை அமைப்பிலும், நிகரமை கொள்கைகளிலும் தாங்கள் பேராயக்கட்சியினரை விட எந்த வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்லர் ஏ்ன்பதை திரு. அண்ணுத்துரை அவர்களின் அமைச்சரவை யினர் நிறுவிக் காட்டவேண்டும். பெரியார் கூறியது போல், "பக்த வத்சலம் அமைத்த அமைச்சர்களைவிட, திரு. அ ண் ணு த் து ரை அமைத்த அமைச்சர்களில் ஒருவரும் குறைவுடையவர் அல்லர்". இருப் பினும் இக்கூற்றைப் பெரியார் விட்ட சூளுரையாகவே கொள்ளுதல் வேண்டும் என்று நாம் திரு. அண்ணுத்துரை அவர்களை வேண்டிக் கொள்கின்ருேம்.

பேராயக் கட்சியினர் அடைந்த தோல்வி எதிர்கால அரசியல் வாழ்க்கைக்கே ஓர் எச்சரிக்கையாகும். தான்தோன்றித் த ன மா ன செயல்களும், ஏழைகளை மதிக்காத அதிகாரங்களும், போலி வி ள ம் பரத் தில்லுமல்லுகளும் எப்படியும் என்ருகிலும் ஒழிக்கப்பட்டே தீரும்

என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டியதில்லை. திரு. பக்த வத்சலனார் (!) போட்ட பேயாட்டங்கள் தமிழர்தம் நெஞ்சில் என்றும் நிழலாட்டம் ஆடிக்கொண்டு இருக்கும். மக்கள் மதியாத அவரின் அதிகாரக்குரல் தமிழர்தம் கல்லறைகளில் என்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கும். அவர் சுட்டுப் பொசுக்கிய தமிழ் மறவர்களின் நடுகல் ஒவ்வொன்றின் அடியிலும் திரு. பக்தவத்சலனாரின் மண்டையெலும்பு படையலாக வைக்கப்பட்டுக் கிடக்கும். இதை அவரும் அவரைச் சார்ந்தவர்களும் மறந்துவிட வேண்டா.

இனி, ஆளப்புறப்பட்ட எம் அன்னைத் தமிழின் தானைத் தலைவர்களுக்கு எந்தமிழ்க் கூட்டம் துணை நின்று, அவர்கள் ஆற்றுகின்ற உண்மை பணிக்குத் தலைதாழ்த்த கேட்டுக் கொள்கின்றோம். பொய்மையும் போலியும் கலவாமல் அவர்களின் வாயுரை நிகழவேண்டுமென்று விரும்புகின்றோம். திரு. நெடுஞ்செழியன் அவர்களின் கரவற்ற தொண்டையும், கரகரப்பற்ற உரைகளையும் திரு. கருணாநிதியும் பின்பற்றி நடக்க வேண்டுகின்றோம். மக்களை மயக்குகின்ற பேச்சுகளாலும், விளம்பர உரைகளாலும், போலி நிகழ்ச்சிகளாலும் உண்மையான பயன் ஒன்றும் விளைந்துவிடப் போவதில்லை, என்பதை அமைச்சரவையில் உள்ள ஒவ்வோர் அமைச்சரும் உணர்ந்து கொள்ள வேண்டுகின்றோம்.

தமிழ் நலத்தையும் தமிழர் நலத்தையும் காக்க வந்துள்ள இவர்கள், எவ்விடத்தும், எத்துறையிலும் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறாகவும் இழுக்காகவும், நடந்து கொள்ளவேண்டா. கடந்த மூவாயிர ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் நம் தமிழ் மொழியை— செப்பமும் நுட்பமும் தனிநிற்கும் ஆற்றலும் வாய்ந்து செம்மாப்புற்ற செந்தமிழை – நாம் பேணாதொழிந்ததே நம் பண்பாட்டு வீழ்ச்சிக்கும், அரசியல் தாழ்வுகளுக்கும், முழுக்காரணம் என்றறிந்து, தமிழை— தனித்தமிழைப் பல்லாற்றாலும் வளர்க்கவும், பேணவும் வகை செய்யக் கேட்டுக் கொள்கின்றோம். தமிழக அமைச்சர்கள் தமிழல்லாத தங்கள் பெயர்களை இனியேனும் தமிழ்ப்படுத்தி அறிக்கை விடுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம். 'கருணாநிதி' என்ற தம் பெயரை அருட்குவை என்றோ, அருட்செல்வம் என்றோ மாற்றி அமைக்கின், அது, சென்னை அரசைத் '**தமிழக அரசு**" என்று மாற்றி யமைத்ததைவிடப் பல்லாயிர

மடங்கு மதிப்பும், உயர்வும் வாய்ந்ததாக இருக்கும் என்று நினை வூட்ட விரும்புகின்றோம். பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குத் திருக்குறளைக் கட்டாயமாக ஆக்கி, அதனை ஒரு தனிப்பாடமாகவே (சேக்சுபியர் நூல்கள் போல்) கற்றுக் கொடுக்கச் செய்யின், அது, பேருந்துகளில் எழுதி வைக்கப்படும் திருக்குறள் ஆக்கத்தைவிட நலம் பயக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இவையன்றிக் கீழுள்ள கருத்துகளையும் நம் தமிழக அமைச்சரவையின் பார்வைக்கு வைக்கின்றோம்.

இந்தி தேசியமொழி என்ற நிலையுள்ளவரை நம் தமிழக அமைச்ச ரவையின் அதிகாரத்திற்குட்பட்ட பள்ளிகள் அனைத்திலும் இந்தி மொழியைப் பயிற்றுவிக்க வியலாதென்று நடுவணரசிடம் திட்டவட்ட மாகக் கூறிவிடல் வேண்டும். இதற்குப் பணிந்தோ, குனிந்தோ போகவேண்டிய தேவையில்லை. இந்தி தேசிய மொழியாக இருக்க ஒருபோதும் தகுதியற்றது என்பதை வலியுறுத்திக் கூறல் வேண்டும். தமிழகக் கல்விக்கூடங்களில் தமிழக அரசு மொழியாகத் தமிழும், இந்திய, உலகத் தொடர்பு மொழியாக ஆங்கிலமுமே கற்பிக்கப்படல் வேண்டும். பிற அனைத்தும் கலைப் பாடங்களாகவே இருத்தல் வேண்டும். பிறமொழிகளைப் பயில விரும்புவார் தனிப் பயிற்சிக் கூடங்களில் அவற்றைப் பயின்று கொள்ளட்டும். கல்விக்கூடங் களில் கற்கப்பெறும் பாட நூல்கள் அத்தனையிலும், 'சாதி'க் குறிப்பு களோ, சமயப் பூசல்களோ இருத்தல் கூடாது. எல்லாத் தமிழ்ப் பொத்தகங்களும் தூய தனித் தமிழிலேயே (வடமொழி ஆங்கிலக் கலவை அறவே இன்றி) தக்காரைக் கொண்டு எழுதப் பெறுதல் வேண்டும். பரிசு அடிப்படையில் இவ்வேறுபாடுகளைச் செய்தல் பயன் நல்கும்.

கல்விச் சான்றுகள், தொழில் சான்றுகள், செல்வ நிலைச் சான்றுகள், நிலவுரிமை ஆவணங்கள் முதலிய எத்துறைக் குறிப்பு களிலும் குலப்பெயரோ, சமயப் பெயரோ எவ்வகையானும் குறிக்கப் பெறுதல் அறவே கூடாது.

விளைநில வரம்புபோல், மனைநில வரம்பும், செல்வநிலை வரம்பும் கட்டப்பெறுதல் வேண்டும். திரைப்படக் கொட்டகைகளை ஊர் நடுவில் நடத்த இசைவு தரல் கூடாது. ஊருக்கு வெளியே அரைக்கல் தொலை

விலேயே இத்தகைய பொழுது போக்கு மன்றங்களுக்கு இடம் ஒதுக்கிடல் வேண்டும். திரைப்பட விளம்பரங்கள் யாவும் திரைப்படக் கொட்டகைக்கு அண்மையிலேயே வைக்கப்பெறல் வேண்டுமே யன்றி ஊர் முழுதும் உள்ள சுவர்களிலோ, மரங்களிலோ ஒட்டப்பெறுதலும் கட்டப் பெறுதலும் தடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுவிடங்களில் படங்கள் இன்றி வெறும் அறிவிப்புகள் அடங்கிய விளம்பரச் சுவரொட்டிகளை வேண்டுமானுல் ஒட்ட இசையலாம். திரைப்படத்தில் வரும் பண்பாட்டுக்கு இழிவு சேர்க்கும் பாடல்கள், கதைகள், நடிப்புகள் அத்தனையும் தடுக்கப்பெறுதல் வேண்டும். திருக்குறளை ஒரு கையில் கொடுத்துவிட்டுக் கொக்கோகத்தை மறு கையிலும் வைக்கச்செய்யும் இன்றைய குமுகாய அமைப்பின் இழிந்த போங்கு நிலை அடியோடு மாற்றி யமைக்கப் பெறுதல் உடனே நிகழ்தல் வேண்டும். தனிப்பட்ட ஒருவர் வரம்பின்றிப் பொருள் சேர்த்துக் கொள்ளுதலும், பலவகைப்பட்ட வளமனைகளை, ஊருக் கொன்ருகக் கட்டிக்கூலிக்கு விட்டுக்கொண்டிருக்க வாய்ப்பளித்தலும், தீநீர் (காப்பி)க்கொட்டை, தேயிலை முதலிய விளை நிலங்களையும் பழத் தோட்டங்களையும் மலைக்கொன்ருக வாங்கிப் போட்டுச் செல்வச் செருக்கில் மிதக்கவிட்டுக் கொண்டிருத்தலும் கட்டுப்படுத்தப் பெறல்வேண்டும். கரும்பு, புகையிலை விளைவைக் கட்டுப்படுத்தி, நெல் விளைவைக் கூடுதலாக்குவதுடன், நிலத்தீர்வைகளை விளைபொருளாகவே தண்டி, அவற்றை அரசினர் விற்பனை நிலையங்களில் முறைவிலைக்குக் கிடைக்கச் செய்தலும் வேண்டும். இவ்விடத்து, தவசங்களைப் பொது நோக்குடனும் நடுநிலையுடனும் கொள்முதல் செய்த உணவமைச்சர் திரு. மதியழகன் அவர்களின் துணிவு பாராட்டத் தக்கது. அவரின் நேர்மையுள்ளம் மேலே கண்ட தனியுடைமைப் பெருக்கிற்கு வரம்பிடும் செயலில் ஈடுபடுமாயின், அவர்க்கும் அவர் கட்சிக்கும் வெற்றியும் புகழும் கிட்டுவது திண்ணம். இற்றைத் தமிழக அரசு இத்தகைய குமுகாயத் திருத்தங்களைத் துணிந்து செய்யுமானுல், எதிர்காலத் தமிழக அரசியல் வரலாற்றில் பேராயக் கட்சிக்கு மட்டுமன்று, வேறு எத்தகைய கொள்கையுடைய கட்சிகளுக்கும் இடமில்லை என்பதைத் துணிவுடனும் தெளிவுடனும் கூறிக்கொள்ள விரும்புகின்றேம்.

சீர்திருத்தத் திருமண ஏற்புச் சட்டத்துடன், திருமண நிகழ்ச்சிகளுக்கான வரம்பற்ற வீண் ஆரவாரச் செலவுகளை அறவே கட்டுப்படுத்தல் வேண்டும். 3 மணி நேரத்திற்கு மேல் திருமண நிகழ்ச்சிகளையும், ஒலிபெருக்கி வைத்துக் காதுகளைப் புண்ணுக்கும் செல்வச்

செருக்கான நிகழ்ச்சிகளையும் பொதுவிடங்களில் நடத்தக்கூடாதெனத் தடை விதிக்கவேண்டும். தமிழர் நடத்தும் கிழமை, மாத இதழ்களில் எல்லாம் தூய தமிழே எழுதப்பெறல் வேண்டும்; இப்பொழுதுள்ள தமிழக அமைச்சர்கள் முன்னின்று நடத்தும் இதழ்களிலாகிலும் இம்முறை கட்டாயம் கையாளப் பெறுதல் வேண்டும். இங்குக் கூறப்பெற்ற எந்தச் சீர்திருத்தத்திற்கும் பணச்செலவே தேவையில்லை என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இவைபோல் இன்னும் மொழி, பண்பாடு, குமுகாய, அரசியல் துறைகளில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களும் ஆக்கப்பட வேண்டிய சட்டங்களும் ஏராளமாக உள்ளன. இதைப் போன்ற கருத்துகள் கேட்கப்படுமானால் அவற்றை ஒழுங்கு படுத்தி, நடைமுறைக்குப் பயன்படுமாறு தமிழக அமைச்சவைக்கு அனுப்பி வைக்க என்றும் தென்மொழி தயங்காது. ஆனால் இவ்வகைத் திருத்தங்களுக்கும், நாட்டை மலர்த்துவதற்கும் தேவையானவை அஞ்சாமையும், ஊக்கமும், அறிவுடைமையுமே.

தமிழக அமைச்சரவை, பேராயக் கட்சி போல் அல்லாமல் உண்மையிலேயே செயல் புரிவதற்கான அவாவும், முயற்சியும், துணிவும் கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பதுக்கல் செய்த உணவுப் பண்டங்களின் கொள்முதலும், அரிசிவிலைக் குறைப்புத்திட்டமும், 75 கற்களுக்குமேல் ஓடும் பேருந்துகளைத் தேசிய மாக்கிடுந் திட்டமும், தேசிய மின் தொழில் ஏற்பாடும், திருமணத் திருத்தங்களும், பிற தமிழாக்கங்களும் இத்தமிழக அமைச்சரவை உண்மையான எண்ணத்தோடும், செயலோடும், ஊக்கத்தோடும், பகுத்தறிவோடும், இயங்குமானால்-இந்திய வரலாற்றிலேயே தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கிக் காட்ட முடியும் என்று கருதப்போதுமான அடிப்படைச் செயல்களாகும்.

பகை, நட்பு, நொதுமல் எனும் முப்புறத் தொடர்பும், பெற்றார், உற்றார் எனும் ஈரகத் தொடர்பும் இன்றி, நாட்டு நலம், மக்கள் நலம், மொழி நலம், உலக நலம் ஒன்றே கருதிக் கூறப்பெறும் இன்னோரன்ன கருத்துகளுக்கு இக்கால் அமைக்கப்பெற்றிருக்கும் தமிழக (தமிழ் அக) அமைச்சரவை செவிசாய்த்துப் புகழ்பெற வேண்டும் என்று பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம்.

— பெருஞ்சித்திரன்.

இலக்கியம்

நூருசிரியம்

துரை - மாணிக்கம்

பாட்டு: ௪.

பரல்பரந்து அரலைவாரி
நுரைநுங்கிப் புரைபுகுந்தே
உன்ளோடிப் புறநடக்கும்
வெள்ளம் போலெம் உள்ளத் தாட்சி!
சொல்லிற் போகா நினைவு முட்ட
அல்லில் விழிக்கும் பகலிற் றுயிலும்
பல்லார் முன்னம் பாடுவாய்ப் படுத்தி
நல்லார் போய செந்நெறி நயக்கும்.
அஃதான்று
புனல்சாய்க்கும் புல்லென்கோ
அனலுருக்கும் மெழுகென்கோ
மேற்சிதர்ந்தே உட்கவிந்த
கார்போர்த்த கதிரென்கோ
தூவெண் பஞ்சின் திறத்த தாகி
நாவும் நெஞ்சும் ஒன்றி நடக்கும்

இனியர்க் குவந்தே இன்னார்க் கஞ்சி
முனிவி னடுங்கிக் கனிவிற் கலக்கும்
என்னிற்கா திறமுரைக்கோ
தற்படுத்தும் பெட்புரைக்கோ
பொருள்சேரின் புறமிறைத்தே
அறிவயிரும் நிரல் நிரப்பின்
உகுக்கண்ணீர் உளங்கொளுத்த
தகுமணமேல் அழல்வீசிப்
புறவாழ்க்கைப் புறப்பழித்தே
அகவாழ்க்கை அடிப்படுக்கும்
முட்டத் தடங்கிய முற்றா நெஞ்சின்
ஆட்டத் தழுந்திய இன்பம்
நாட்ட நாட்ட நாநா டாதே!

பாட்டு: ௪.

பொழிப்பு: பருக்கைக் கற்கள் மேல் அளாவிப் பரந்தும், பெரு மணலை அரித்து வாரியும், கதுமெனப்பாய்ந்து அலைதலின் நுரையினை மிகுவாகத் தோற்றியும், நிலத்தின் உட்டுளை புகுந்தும், அடிக்கண் விரைவு படவும் மேற்கண் மென்னடையிட்டும் பாய்ந்தோடும் புதுப் புனலின் தன்மையதாம் எம் உணர்வு துளும்பும் உள்ளத்தின் ஆளுகை!

சொற்களில் இதுகாறும் புகுந்து வெளிவரா நிலைத்த எண்ணங் கள் எஞ்ஞான்றும் புறப்பாட்டிற்கு உணர்வை முட்டுதல் செய்வதால், திடுமென அமைதியான இராக்காலத்தே விழித்து எழவும், பாடு நிரம்பிய பகற்காலத்தே இராவிழித்த களைப்பால் துயிலவும், பலபடக் கூடுவார் முன்னிலையில் வெளிப்பாடுற உரைதரவும், அவ்வுரைப் பாட்டின் வழி, முன்னை நலஞ் செய்தாரின் வழியே செவ்விய நெறி முறைகளை விரும்பிப் பாராட்டி ஏற்கவும் செய்வதாம் அவ்வுள்ளத்தின் ஆளுகை!

அவ்வாளுகை நிறைந்து,

எம்மை, அவ்வுணர்வெனும் புதுப்புனலால் சாய்வுறும் புல் என்று கூறுவேனோ? அனல் பாய்ந்து உருக்குகின்ற மெழுகென்று

கூறுவேனோ? அன்றிப், புறத்தே விரிவார்ந்து அகத்தே கவிந்த மழை நிரம்பிய முகிலால் போர்க்கப் பெற்ற கதிரென்று கூறுவேனோ?

தூய வெண்மையான மெல்லிழை சான்ற பஞ்சு போல், புறப்படுத்தும் நாவும் அகப்படுத்தும் நெஞ்சும் ஒன்றே ஆகி, நலஞ்சான்ற இனித்த நடையுடையார்தம் தன்மைக்கு மகிழ்ந்து, அவ்வாறல்லாத நடையினார்தம் புன்மைக்கு வெருண்டு, நடுங்குதல் செய்தும், முன்னையோர் கனிவான சொல்லிலும் செயலிலும் கலந்து ஒன்றுதும் எமக்குச் சிற்சிலகால் வயப்பட்டு நிற்காத தன்மையை உரைக்க மாட்டுவனோ? எம்மைத் தம்வயப்படுத்தும் விருப்பினை உரைக்க மாட்டுவனோ?

எம் இயல்பான வினைவழிப் பொருள்வந்து சேரின், அதனைப் புறத்தார்க்கும் வாரி இறைத்துத் தீர்த்தும், எம் அறிவினை உண்கின்ற வரிசைப்பட்ட வறுமையினால், எம் உளத்தைக் கொளுத்தும்படி உகுக்கின்ற கண்ணீர் நிரம்பிய எம் போக்கிற்கு இயைந்த மணியாட்டியின்மேல் தீப்போலும் உரையை வீசியும் இவ்வுலகியல் மாந்தர் தாம் புறத்தே ஆரவாரிக்கும் புல்லியவாழ்க்கையைப் பழித்தும், அக வாழ்க்கைக்கு எம்மை அடிமைப்படுத்தும் எண்ண மூட்டங்களால் உள்ளடங்கிக் கிடக்கும் எம் முதுமை சாரா இளநெஞ்சினது ஆட்டத்தே அழுந்திக் கிடப்பதான இன்பத்தை எடுத்து விளக்க முற்பட முற்பட நாவும் நாடுதல் இயலாதாகின்றது.

விரிப்பு:

> பரல்–பருக்கைக் கற்கள்; பரந்து–அளாவிப்பரந்து;
> அரலை–பெருமணல்; நுங்குதல்–மிகுவாகத் தோற்றுதல்;
> புரை–நிலத்தின் உட்டுளை

உள்ளோடிப் புறம் நடக்கும்–அடிப்புறம் விரைந்தும், மேற்புறம் விரைவு குறைந்தும் நடையிடும் வெள்ளத்தின் இயல்பாந் தன்மை. உணர்வு நிறைந்த உள்ளத்தின் தன்மையும் அதுபோல் என்க. புறத்தே நோக்குவார் உள்ளோட்டம் அறியார் ஆகலின் அவ்வாறு கூறலாயிற்று. உணர்வு நிரம்பிய உள்ளம், புதுப் புனல் வெள்ளத்திற்கும், அதுபரந்து செல்லும் தன்மை அவ் வுள்ள உணர்விற்கும், பரல் பெருத்த வினைகளுக்கும், அரலை சிறு வினைப்பாட்டிற்கும், அவற்றில் பரந்து தோன்றும் நுரை அவ்

வினைப்பாடுகளால் மீதூரும் இன்ப துன்பத்திற்கும், உட்டுளை காலத்திற்கும், அதனுள் ஒரளவு வெள்ளம் புகுந்து கரவுதல், காலத்தால் அவ்வுணர்வின் ஒரு பகுதி மறைந்து போதற்கும், பொருந்தக்கூறி, உள்ளத்தின் ஆளுகையே உணர்வு சான்ற புலவன் ஒருவனின் வாழ்க்கை என்று உருவகித்துக் கூறிய தென்க. என்னை? உள்ளத்தின் ஆளுகையே வாழ்க்கையாயின் அறிவின் ஆளுகை எதுபோலாம் எனின், அமைச்சு போலாம் என்க. அறிவு அமைச்சு போலும், உள்ளம் அரசு போலும் நின்று ஆள்வதே உணர்வு வாழ்க்கை எனக்கொள்க. இனி, உணர்வற்றார் வாழ்க்கை இருள் நிரம்பிய உள்ளம் போலும், மருள் நிரம்பிய அறிவு போலுமாகித் துன்பம் சேர்ப்பதாம் என்க.

சொல்லிற் போகா நினைவு: நினைவோட்டத்திற்குச் சொற்களே வாய்க்கால் ஆகலின், அதன் வழிக் கழியாத நினைவுகள் என்றபடி; நினைவு—நிலைத்த எண்ணங்கள். நில்—முதனிலை.

முட்டுதல்: புனல் நிரம்பிக் கழிவாயை முட்டுதல் செய்தல் போல், உணர்வுச் சுவரை நிரம்பிய எண்ணங்கள் முட்டி நிற்பது.

விழிக்கும் துயிலும்: தாமே நிகழ்பவாகலின் விழிக்கும் துயிலும் எனலாயிற்று. விழிப்புநிலை பகலுக்கும், துயிலுநிலை இரவுக்கும் உரியவாயிருக்க, மாறாகச் செயல்படுவது உணர்வோட்டம் தொடர்ந்து நடக்குமாகலின் என்க.

பாடுவாய்—வாயுரை. வாய்ப்பாடு என்பது மாறிவந்தது. இடுத்தல்—செய்தல்.

செந்நெறி—செவ்விய நெறி. நயக்கும்—விரும்பி ஏற்கும்.

ஆன்றல் – நிறைதல்.

புனல் சாய்க்கும்..................கதிரென்கோ: புனல் பாய்தலால் அதன் விரைவு தாளாது சாயும் புல்லைப்போலவும், அனல் காய்தலால் அதன் சூடு தாளாது உருகும் மெழுகைப் போலவும், விரிந்து சிறகார்ந்த முகிற்கூட்டத்துள் ஒடுங்கிய கதிர் போலவும் எம்முடல் ஆட்பட்டு நிற்கின்றது என்பதாம். புனலால் சாய்க்கப்பெறும் புல் தன் வலியிற்குன்றி நீரின் வலிக்குத் தன் உடலை ஆட்படுத்துதல் போல், உணர்வு சான்ற உடல் தன் வலிகுன்றி

உணர்வு வலிக்கு ஆட்படுதலும், அனல் போன்ற உணர்வால் தான் உருக்குலைதலும் காட்டப் பெற்றதென்க. இனிப், புறநிலையில் இவ்வாறான மாற்றங்களும் ஏலாமையும் இருப்பினும் அகநிலையில் எஞ்ஞான்றும் ஒளி நிரம்பி யிருத்தலால் கார் போர்த்த கதிர் எனலாயிற்று.

தூவெண் பஞ்சின்.............. ஒன்றி நடக்கும் இனியார்: பஞ்சு அகத்தும் புறத்தும் தூய வெண்மையாக விருத்தல்போல் நாவும் நெஞ்சும் ஒன்றி நடப்பார் தம் அகமும் புறமும் தூய்மையாக விளங்கும் என்றபடி. அவ்வாறு விளங்குபவரே இனியார் என்றதுமாம். காட்சியும், சொல்லும், செயலும் தனித்தனியே இனிமை பயத்தலினும் இம்மூவினையும் ஒன்றி நடத்தலே இனிமையுடையது என்க. நெஞ்சு நடந்தவழி நா நடப்பதே இயல்பாக இருக்க, நா நடந்த வழி நெஞ்சு நடப்பதாக முன்பின் முரணிக் கூறியது ஏனெனில், மணம் நுகர்ந்த வழி மலர் காண்டலே புற நிகழ்ச்சியாதல் போல், சொல் வந்த பின்னரே நெஞ்சு உணரப்படும் ஆகலான் என்க.

இன்னார்: அவ்வாறு நாவும் நெஞ்சும் ஒன்றி நடவாதார்.

அஞ்சுதல்: அத்தகையாரால் பிற்றைக் காலத்து என்ன நேருமோ என்று அஞ்சுதல்.

முனிவின் நடுங்கிக் கனிவிற் கலக்கும்: இன்னாதார்க்கு இயல்பே அஞ்சுதலும், அவர் முனிந்து கூறுவனவற்றிற்கு நடுங்குதலும், இனியார்க்கு இயல்பே உவத்தலும், அவர் கனிந்து கூறுவனவற்றிற்கு உளங்கலத்தலும் இயல்பாயின வென்க. இவ்விரு நிகழ்வுகளும் அறிவு கலவாமல் உள்ளமே செய்கின்ற செயல்கள் ஆதலின், என் நிற்கா திறம் ஆயிற்று. ஈண்டு 'என்' என்ற அகவுணர்வு நிலை அறிவு பற்றி விளங்கிற்றென்க.

தற்படுத்தும் பெட்பு: தனக்கு உட்படுத்தும் தன்மை. அறிவுணர்வால் ஆட்படாது உள உணர்வால் ஆட்படுதலின் 'என்' நிற்காது தற்படுத்தது எனலாயிற்று.

பொருள் சேரின்: பொருள் சேரப் பெறின். சேர்த்தல் என்னாது சேரல் என்றது, பொருளை விரும்பிச் சேர்க்காததும், இயல்

பாகச் சேர்தலையே குறித்ததும் ஆகும். அவ்வாறு இயல்பாக வந்து சேரினும் அதனைத் தனக்காகப் பயன்படுத்திக் கொள்ளாது, தன் புறத்தே உள்ள யாவர்க்கும் பயன்படுத்தல் உள்ள உணர்வு நிரம்பியார் செய்கையாதலின், புறமிறைத்தல் இயல்பாயிற்று. அதுவும் அளவிட்டுச் செய்யப்படாததாகலின் இறைத்தல் எனலாயிற்று அவ்வாறு சேரும் பொருளைத் தனக்கென வைத்துப் பேணிக் கொள்ளாது, தன் புறத்தே இருப்பார்க்கும் தட்டின்றி முழுதும் இறைத்தலால், பொருள் முட்டுப் பாடுற்று வறுமை மிகுதலே நிரப்பு எனலாயிற்று.

வறுமை என்பது ஏலாமை, சோம்பல், உழையாமை, முயற்சியின்மை முதலியவற்றால் வரும் வெறுமை நிலை.

நிரப்பு: ஈகை நிலையால் ஏற்படும் பொருள் முட்டுப்பாடு. இது சான்றோர் போற்றலுக் குரியதாகையின் நிரப்பு எனலாயிற்று. இதனை வறுமை எனக்குறித்தல் சாலாது. நிரப்பு மங்கலச் சொல். தொடர்ந்த வரிசைப்பட்ட வறுமைநிலை யாதலின் நிரல் நிரப்பு எனலாயிற்று. இத்தகைய இலவாந் தன்மையால் அறிவுணர்வு ஊறுபடும் ஆகையான் அறிவயிரும் நிரல் நிரப்பு எனலாயிற்று. அயிர்தல் ஆர உண்ணல்.

தன்னைச் சார்ந்த பிறர்க்குச் சேரும் பொருளையெல்லாம் இறைத்தலால் வரும் தொடர்ந்த வறுமைநிலை அறிவைத் தடைப்படுத்தி, அதனான் வரும் வினைப்பாட்டைக் குறைவிக்குமேயன்றி, உளவுணர்வைச் சிதைத்து விடாது என்னும் குறிப்பு தோன்றவே நிரப்பு அறிவு அயிரும் என்றது. எத்துணை வறுமை வந்துள்ள போதும் தாம் கொண்ட ஒழுகலாற்றை நல்லுணர்வு சான்றவர் என்றும் கைவிடாது தம் உள்ளவுணர்வில் துளியும் குன்றார் என்ற உறுதிப் பாடு தோன்றவே அவ்வாறு கூற லாயிற்று. ஒப்புரவு உளத்தின் செயலாம். அறத்தால் வந்த பொருளைத் தம் திறத்தால் ஒன்றிப் புறத்தே இருப்பார் யாவர்க்கும் தட்டின்றி வாரியிறைத்து அதனான் பொருள் முட்டுற்ற சான்றவர், அவ்வினைப் பாட்டை அறிவால் ஆயாது உளத்தாலேயே பருகுவர் என்பது உட்பொருள். அறிவான் துன்பெனக் காணப்படுவதுள் உளத்தான் இன்பெனக் காண்டலும் உளதாகலின் இதுபற்றி விரித்துக் கூறலாயிற்று. ஒப்புரவு அறிவுக்குத்

துன்பெனினும் உளத்திற்கு இன்பந் தருதல் பற்றியே வள்ளுவரும், ஒப்புரவினுல் வரும் கேடு, விற்றுக்கோள் தக்கதுடைத்து என்று வலித்துக் கூறினர் என்க.

உகுகண்ணீர் உளங்கொளுத்த, தகுமனேமேல் அழல் வீசி: தொடர்ச்சியாக வரும் வறுமை நிலேயால் மனேவி கண்ணீர் உகுத்தாள்; அஃது உளத்தைக் கொளுத்தியது என்றபடி. நிரல் நிரப்புக்குக் கண்ணீர் உகுத்ததால் அவள்மேற் கடிதல் வேண்டுதலாயிற்று. தம் ஒப்புரவு சான்ற உளத்தைத் தேராது, கண்ணீர் வடித்தல் கடிய வேண்டுவதாகலின் அழல்போலும் சுடுசொற்களே வீசவேண்டுவதாயிற்று. என் நிற்கா திறஞ் சான்றதும், தன் படுத்தும் பெட்பு வாய்ந்ததும், கார் போர்த்த கதிர் போன்று இருப்பதுமான எம் உள்ள உணர்வையும் அதன் ஒப்புரவையும் உணர்ந்து கொள்ளாத்தகைமையினேளாகிக் கண்ணீர் உகுத்த தன்மைக்கு அழன்று கடியலாயிற்று. உளம் கொளுத்தப்பெற்ற பின் அதனின்றெழும்பும் வல்லுணர்வு அழல் போன்ற சொற்களே வீசிற்றென்க. ஒப்புரவினுல் வரும் கேட்டிற்குத் தாளாத்தன்மையினுள் எனினும் அவள் தகுதி சான்ற மனேவியே என்று சுட்ட தகுமனே எனலாயிற்று.

புறவாழ்க்கைப் புற்பழித்து: புறவாழ்க்கையின் புல்லிய தன்மைகளேப் பழித்து.

அகவாழ்க்கை அடிப்படுக்கும்: புல்லிய புறவாழ்க்கையை வெறுத்து, ஒளிசான்ற அகவாழ்க்கைக்கே அடிப்படுக்கும் உணர்வு. அகவாழ்க்கை—நல்லார் போய செந்நெறி நயக்கும் வாழ்க்கை; நாவும் நெஞ்சும் ஒன்றி நடக்கும் வாழ்க்கை.

மூட்டம்: அத்தகை வாழ்க்கையின் உள்ளார்ந்த உணர்வுகள் நிறைந்த நிலே. இந்நிலேயின் அடங்கிக்கிடக்கும் நெஞ்சம்.

முற்று நெஞ்சம்: இளமை நெஞ்சம். கள்ளமும், கவடும், பொய்யும், புனேவும்—சூழாது மென்மையும், இளகலும் சான்ற உள்ளம். உள்ளத்து இளமையும், அறிவின் முதுமையுமே சான்றோர்க்கு உவக்கும் தன்மையவாகலின், அப்பொருள் தோன்றக் கூறியது.

நெஞ்சு முற்றுதல் எதிர்ப்படும் மெல்லுணர்வுகளை அறியாது போதல் பற்றி, வேண்டுவது இளமை நெஞ்சமே என்றபடி. உள்ள உணர்வுகள் மென்மை சான்றும் அறிவுணர்வுகள் வன்மை சான்றும் இருத்தலே இவ்வுலக வாழ்க்கைக்கு இன்பமும், அவ்வாறல்லாது, உள்ள உணர்வுகளில் வன்மையும், அறிவு உணர்வுகளில் மென்மையும் பெறுதல் இவ்வுலக வாழ்க்கைக்குத் துன்பமும் தருதல்பற்றி, முற்று நெஞ்சின், ஆட்டத்தழுந்திய இன்பம் எனலாயிற்று.

முற்று நெஞ்சின் ஆட்டம்: மெல்லியது துளிக் காற்றுக்கும் ஆடுந் தன்மை போல், இளமை நெஞ்சம் துளி இன்பத்தையும் பேரின்பமாகக் கொள்ளும் தகையது என்க. ஆட்டம்–அசைவு. உள்ள அசைவுகள் ஒவ்வொன்றும் இன்பமே என்றபடி. அத்தகைய இன்பம் எடுத்துரைக்கத் தக்கதும், முழுதும் எட்டத் தக்கதும் அன்று என்பதால், நாட்ட நாட்ட நா நாடாது எனலாயிற்று. அத்தகு இன்பத்திற்கு எல்லையே இல்லை என்பது பொருள்.

இப்பாட்டு உணர்வு சான்ற அகவாழ்க்கையின் தன்மைகளைக்கூறி, ஒப்புரவாட்சியின் அகப்புறக் காட்சிகளைக் காட்டி, துன்புறு மாந்தர்தம் துயர்க்கு அவர்தாம் அகவாழ்க்கைக்கு அடிப்படுக்கா நிலையே கரணிய மென்றெடுத்து விளக்கி ஆற்றப்படுக்கும் வஞ்சித்தளை பொதுவிய நேரிசை ஆசிரியப்பாவாம்.

இப்பாட்டு பொதுவியல் என் திணையும், முதுமொழிக்காஞ்சி என் துறையுமாம்.

(– வளரும்.)

தூலை இதழ் விற்பனையாகிக் கொண்டுள்ளது.

பாரதிதாசன் குயில்

இவ்விதழில் 'குயில்' நடத்தும் கல்லூரி மாணவர் போட்டி!
கலந்து கொள்ளத் தவறாதீர்கள்.

- பாவேந்தரின் வெளிவராத புதிய பாடல்கள்!
- "குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும்" பாவேந்தரின் குறுநாடகம்.
- நெஞ்சில் நிறைந்தவர் — கேட்டலும் கிளத்தலும் — புதிய பகுதிகள்.

விளக்கத்திற்கு.
பாரதிதாசன் குயில்—புதுச்சேரி–1.

- மணிவேலன்

இன்றே செய்வீர் !

1 வெள்ளையப் கவுண்டரென்றும் நெல்லையப்ப பிள்ளையென்றும்
வீணில் நீவிர்
தெள்ளுத்தமிழ்ப் பெயரோடு வாலெதற்கோ ஒட்டுகின்றீர்?
நெந்நாய்க் கூட்டம்
வெள்ளாட்டு மந்தையின்மேல் போய்விழுந்து பிடுங்குகின்ற
வெறியைப் போல
'தள்ளிவைத்த சாதியினர்(?)' மேல்பாயும் நீவிரெலாம்
தமிழர் தாமே?

2 மேடையின்மேல் நின்றபடி 'சாதியில்லை!' என்றுமிசைப்
பலகை தன்னைத்
தாடையிலே அறைவதுபோல் தட்டிதட்டி பேசிவிட்டுத்
தம்வீட் டுக்குள்
கூடையிலே குஞ்சுகளைக் காப்பதிலே குறியான
கோழி போல
கேடுசெயும் சாதியினைக் காக்கின்றீர்! உம்வாயைக்
கிழித்தால் என்ன ?

3 அழகாகப் பேசுவதில் அணியணியாய்த் திரள்கின்றீர்!
ஆனால் நீவிர்,
ஒழுகுகின்ற தேன்போல உம்வாயில் உதிர்கின்ற
ஒருசொல் லேனும்
முழுதாகச் செயலினிலே காட்டுதற்குச் சிறுபொழுதும்
முயன்ற துண்டோ?
கிழிகின்ற வாய்ப்பேச்சால் இதுவரைக்கும் நீவிரிங்கே
கிழித்த தென்ன?

4 ஊர்ப்பெயரும் சாதியதன் அடிப்படையில் வைக்கின்றீர்
உங்கட் கெல்லாம்
யாரிந்த வெறியூட்டி வைத்தனரோ? தமிழினத்தின்
ஒருமைப் பாட்டை
ஊர்சிரிக்கச் செய்வதிலே வென்றுவிட்டார்; உங்கட்கேன்
உணர்வே இல்லை?
ஆர்த்தெழுவீர் சாதியெனும் 'கொடும்பேயை' குழிதோண்டி
அடக்கம் செய்ய!

5 செட்டிகுளம், தேவர்குளம், பறையன்குளம், ஒட்டநத்தம்,
சேணி யர்வாழ்
பட்டி, வெள் ளாளன்குளம், ஆசாரி யார்பள்ளம்,
பார்ப்பான் பேட்டை,
இரெட்டிபட்டி... என்றெல்லாம் ஊர்ப்பெயரை வைக்கின்றீர்,
ஏனோ இந்தக்
கெட்டொழியும் நெறிநோக்கிச் செல்கின்றீர்! அதையொழிக்கக்
கிளர்ச்சி செய்யீர்?

6 ஊருக்கும் தெருவுக்கும் பொதுநிலையம் அத்தனைக்கும்
உலுத்த சாதிப்
பேராக வைப்பதனைத் தடைசெய்யப் புதுச்சட்டம்
போடல் வேண்டும்!
யாராக இருந்தாலும் பெயரோடு சாதியினை
இணைத்துக் கொண்டால்
நேராகச் சிறைக்கனுப்பத் தனிச்சட்டம் இயற்றுகின்ற
நெஞ்சம் வேண்டும்!

7 அணியணியாய் இளைஞர்படை தமிழகத்தில் உடனடியாய்
அமைக்க வேண்டும்!
பிணிப்பிணியாய் நமைச்சூழும் சாதிப்பேர் பலகைகளைப்
பெயர்க்க வேண்டும்!
துணிவோடு கலப்புமணம் செய்திட்டோர் குழந்தைகட்குத்
துணையாய் நிற்கப்
பணிமனையில் சிறப்பிடமும் பல்கலைசேர் கழகத்தில்
படிப்பும் வேண்டும்!

8 கோயிலிலே குறிப்பிட்ட ஒருசாதி பூசைசெய
மற்றெல்லாரும்
வாயிலிலே ஒதுங்கிநின்று வழிபாடு செய்கின்ற
மடமை தன்னை
ஓயாது போராடி மாற்றுதற்கே வலியபடை
உடனே வேண்டும்!
வாயாரத் தமிழ்ப்பாடி வழிபாடு செய்வதற்கோர்
வழியைக் காண்போம்!

9 வாய்த்திறனில் நாமெல்லாம் வல்லவர்கள்! நமைவெல்ல
யாரே வல்லார்?
காய்த்தால்தான் மரத்துக்குச் சிறப்பாகும்; கண்கவரப்
பூத்தும் என்ன?
வாய்த்திட்ட பொழுதெல்லாம் செயல்செய்வீர்; இனிப்பான
வாய்ச்சொல் வேண்டா!
'தாய்'என்று மலடியினை அழைத்தென்ன? மகப்பேறே
தகுதி காட்டும்!

10 அன்றிருந்த பெருமையினைச் உரைத்துரைத்தே அகமகிழ்ந்தால்
ஆவ தென்ன?
இன்றிருக்கும் நிலைமாற்றி ஏற்றமுறு நிலைகாண
எழுச்சி கொள்வீர்!
'இன்றைக்கோ... நாளைக்கோ செய்திடலாம்' என்றெண்ணி
இருக்க வேண்டா;
நன்றுசெய்வீர் எச்செயலும்; நாடுயர நலமுயர
இன்றே செய்வீர்! O

காட்டுப் புண் (YAWS)

பொ. குமாரசாமி,
சா. க. பழனிசாமி.

முன்னுரை:- காட்டுப்புண் அல்லது உருளைக்கிழங்கு அம்மை நோய், (Yaws) நீண்டு, வளைந்து வளைந்து காணப்படும் 'பெர்தூனி புரி நுண்ணியிரிகளால் (Treponema Pertenue) ஏற்படுகின்றது. இந்நோயானது கிரந்தி (Syphilis) நோயுடன் நெருங்கிய தொடர் புள்ளது எனினும், இது கிரந்தி நோய் போன்று ஒரு பால்வினை (Veneral disease) நோயன்று. இந்நோய், பொதுவாக இளைஞர் களிடையே காணப்படுகின்றது. எலும்பு, தோல் ஆகிய உறுப்புகள் பெரிதும் தாக்கப்படுகின்றன. இந்த நோய் நேரடித் தொடுதல் மூலமாகவோ, சிறிய பூச்சிகள், ஈக்கள் முதலயவை மூலமாகவோ பரவுகின்றது.

காட்டுப்புண் நோய் மிகுந்து காணப்படும் இடங்கள்:-

புவி மையக் கோட்டின் இரு பக்கங்களிலும் மிகுந்து காணப்படு கின்றது. அடர்ந்த காடுகள், மிகுந்த மழை, மிகுதியான ஈரப்பசை, இறுகிய மண், ஏராளமான பூச்சியினங்கள் ஆகியவை இந்த நோய் பரவுவதற்கும் அவ்விடம் நிலைத்து நிற்பதற்கும் கரணியங்களாகின் றன. ஆயினும் இந்நோய்க்கு முகாமையான கரணியங்கள் அவ் விடம் வாழும் மக்களின் தூய்மையற்ற தன்மை, ஏழ்மை, அறியாமை, பின்தங்கிய நிலைமை ஆகியவையே ஆகும்.

இவ்விடங்களில் வாழும் மக்கள் ஆவின் பாலை அருந்தமாட் டார்கள். இதற்குக் கரணியம் யாதெனின், பால் கன்றுக்குட்டிக்குத் தான் ஏற்றது – மாந்தர்க்கன்று என்று கருதுகின்றார்களாம். அவ் வளவு அறியாமை! பெரும்பான்மையான இடங்களில் உப்பு கூட கிடைக்காது. அவ்வளவு பின்தங்கிய நிலைமை! தமிழகத்தில் கோவை நீலகிரி மாவட்டங்களில் உள்ள இருளர்கள் என்னும் ஒரு பிரிவின ரிடையே இந்நோய் மிகுந்து காணப்படுகிறது.

இந்நோயின் முதனிலை: இந்நோய் கைகால்களில் முதலில் தோன்றும். குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோரிடம் முதனிலையிலும்

தெளிவாகத் தென்படும். நீளவட்டமான தடிப்புகள் கால்களின் வெளிப்புறத்தில் தோன்றும். இத்தடிப்பானது அசடு (crest) படிந்து காணப்படும். இந்த அசடை நீக்கிப் பார்ப்பின், த டி ப் பி லி ரு ந் து குருதி கசியத் தொடங்கும். இவ்வாறு கசியும் குருதியானது உலர்ந்து மீண்டும் அசடு படியத் தொடங்கும். இந்நிலையில் நோயாளி மருத்துவ மனைக்கு வருவதில்லை. இதற்குக் காரணியமாவன.

(க) இத்தடிப்புகள் வலியைக் கொடுப்பதில்லை.

(உ) இத்தடிப்புகள் தாமாக மறைந்துவிடுகின்றன.

நோயின் இரண்டாம் நிலை: முதனிலையில் தோன்றிய தடிப்புகள் மறைந்து ஆறுகிழமைகட்குப் பின்னர், உடம்பு முழுவதும் அரிக்கும் தன்மை வாய்ந்த சிறிய தடிப்புகள் தோன்றுகின்றன. இத்தடிப்புகள் உருளைக்கிழங்கை ஒத்திருத்தலால், 'உருளைக்கிழங்கு அம்மை' என்று அழைக்கப்படும். இத்தடிப்புகள் உள்ளங்காலில் தோன்றும்பொழுது காலை நிலத்தில் நன்கு ஊன்றி நடக்க முடியாது. இ ந் நி லை யி ல் நோயாளியின் நடை மாறுபட்டு நண்டு போல் அசைந்து செல்வதால், 'நண்டுநடை அம்மை' என்று மற்றொரு பெயரும் இந்நோய்க்கு வழங்குகிறது. இந்த இரண்டாம் நிலைத்தடிப்புகளும் சில கிழமை களில் தாமாகவே மறைகின்றன.

மறைநிலை;- இரண்டாம் நிலையைத் தாண்டிய பிறகு, ஏறத்தாழ ஐந்து ஆண்டுகட்கு நோயானது எந்தவகை அறிகுறியையும் காட் டாமல் மறைந்தே உறைகிறது. எனவே இந்நிலை மறைநிலை அல்லது கரவுநிலை என்று அழைக்கப்படுகின்றது. இந்நோய் எங்கு மறைந் திருக்கின்றது? எப்படி மறைந்துள்ளது? என்பவை புரியாத புதிர் களாக உள்ளன.

முதிர்நிலை:- நோய் இந்த நிலைக்கு வந்தவுடன், முந்திய நிலை களைப் போன்று அல்லாமல் உடலில் நிலையான அழிவுகளை உண் டாக்குகின்றன. முகாமையாக மூக்கும் அதன் அருகில் உள்ள திசுக் களும் முதற்கண் அழிக்கப்படுகின்றன. எனவே மூக்கும் வாயும் இணைந்து ஒரு பெரும் பொந்து போன்று முகத்தில் தெரியும். இந் நிலையில் நோயாளி அஞ்சத்தகும் தோற்றத்தை உ டை ய வ ஞ ய் இருப்பான்.

கண்களும் சிலபொழுதுகளில் தாக்கப்படுகின்றன மூட்டு களுக்கு அருகில் சிறு சிறு கட்டிகள் காணப்படும். மூட்டைச் சுற்றிய மெல்லிய தோலில் (Synovial membrane) அழற்சி உண்டாகும். கைகளிலும் கால்களிலும் உள்ள தோல் சில இடங்களில் நிறமிழந்து வெளுத்துக் காணப்படும். உள்ளங்காலின் தோல் தடித்தும், சில இடங்களில் வெடித்தும் காணப்படும். கால் வெடிப்புக் கண்ட இடங் களில் வலி மிக அதிகமாக இருக்கும். பெண்களிற் சிலருக்குச் சுண்டு விரலானது சுருங்கி மடங்கிவிடும்.

எலும்புகளும் இந்நோய்க்கு இலக்காகின்றன. மண்டை எலும்பு காறை எலும்பு, நீண்ட எலும்புகள் ஆகியவற்றில் இங்குமங்குமாகத் தடிப்புகள் காணப்படும். ஆறுத குழிப்புண்கள் ஏற்படும். மூட்டு களில் வலி ஏற்பட்டு நோயாளி அல்லலுறுவான். இறுதியில் கை கால்கள் திருகியும் வற்றியும் காணப்படும், புரிநுண்ணியிரிகளை, அழிந்து வருகின்ற திசுக்களிலிருந்து எடுத்துக்காட்ட இயலாது. கணுக்கால் எலும்பின் (Tibia) முன், உள் பகுதியில் எலும்பு மிகுதி யாக வளர்வதால், அவ்வெலும்பு வளைந்த வாள் போன்று முன் வளைந்து காணப்படும். நெஞ்சாங்குலை, குருதிக் குழாய் மண்டலமும், நரம்பு மண்டலமும் இந்நோயினின்றும் தப்பித்துக் கொள்கின்றன.

நோய் பரவுதல:– முன்பு கூறியவாறு இந்நோய் நேரடித் தொடு தல் மூலமாகவும், பூச்சிகள் மூலமாகவும் பரவுகின்றது. இளம் அகவை யினர் தாக்குண்டால் சுற்றுப்புறம் உள்ளவர்களுக்கு எளிதாகப் பரவும் ஒரோ வழி நகர்ப்புறங்களுக்கும் பரவுகின்றது. தாயிடம் உள்ள நோய் கருப்பையில் வளரும் குழந்தையைத் தாக்குவதில்லை.

தமிழகத்தில் இந்நோய்க்கு வழங்கும் பெயர்கள்:– கற்பனையில் சிறந்த தமிழ் மக்கள் இந்நோயின் தோற்றத்தைப்பல பொருள்களோடு ஒப்பிட்டுப் பெயர் வழங்கினர். உகுளைக்கிழங்கு போன்று தடித்துக் காணப்பட்டதால் 'உருளைக்கிழங்கு அம்மை' என்று அழைத்தனர். காட்டுப் பகுதிகளில் இந்நோய் மிகுந்து காணப்பட்டதால் 'காட்டுப் புண்' என்றும், தடிப்புகள் மீது காணப்படும் அசடுகள் கேழ்வரகுக் களி போன்று காணப்பட்டதால் "களி அம்மை" என்றும், பெரிய புண் களாகச் சிலகால் தோற்ற மளித்தமையால் 'பரங்கிப் புண்' என்றும் அழைத்தனர்.

ஆய்வுகள்:—

(க) நுண்பெருக்கி ஆய்வு:- நோய் கண்டுள்ள இடங்களி லிருந்து எடுக்கப்பட்ட திசுக்களை ஆய்ந்தால், புரிநுண்ணுயிரிகள் தென்படும். இந்த ஆய்வு நோயின் முதிர் நிலையில் பயன்படுவதில்லை.

(உ) குருதிநீர் ஆய்வு (Serological Test):- வீழ்படிவு ஆய்வு (Preciptiation test) மிகைநிரப்புச் சேர்க்கை ஆய்வு (Compliment fixation test) ஆகியவை நோயைக் கண்டுபிடிக்க உதவும்.

(ங) புதிர்க் கதிர்ப்படம்:- தாக்கப்பட்ட எலும்புகளின் புதிர்க்கதிர்ப்படம் எடுக்கப்பட வேண்டும். இப்படத்தில் எலும்பின் வெளிப்பகுதி சில இடங்களில் மிகுந்தும், சில இடங்களில் கரைந்தும் காணப்படும்.

பண்டுவம்:— நோயைத், தொடக்க நிலைகளில் எளிதாகக் குணப் படுத்திவிடலாம். மட்டவெள்ளி (அலுமினியம்), பூஞ்சணிபம் (பெனி சிலின்) கலந்த "பி. ஏ. எம்." என்னும் மருந்தை உடலில் ஊசி மூலம் செலுத்தல் வேண்டும். நோய் முதிர்ந்து, முகம் முதலிய இடங்கள் அழிக்கப்பட்டு விட்டால் பூஞ்சணியத்துடன் ஒட்டுறுப்பு அறுவை மருத்துவம் (Plastic Surgery) செய்யவேண்டும்.

நோய் தடுப்பு:- (க) நோய் குடிகொண்டிருக்கும் இடங்களுக் குச் சென்று அங்கிருக்கும் நோயாளிகள் அனைவரையும் ஒரே பொழு தில் பூஞ்சணியத்தின் (பெனசிலின்) மூலம் குணப்படுத்த வேண்டும், ஏறத்தாழ இரண்டு விழுக்காட்டுக்கு மேலான மக்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இந்நோயால் தாக்கப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் அனை வருக்கும் பூஞ்சணியம் (பென்சிலின்) மருந்து செலுத்தப்பட வேண்டும்.

(உ) குருதி நீர் ஆய்வுக் கூடங்களும், புதிர்கதிர்ப் படப் பொறி, நுண் பெருக்கி ஆகியவை உடைய ஆய்வுக் கூடங்களும் நிறுவி அவை மூலம் இந்நோயைக் கண்டுபிடித்துக் குணப்படுத்த வேண்டும்.

(ங) மக்களுக்குத் தூய்மை பற்றிய அறிவை உண்டாக்க வேண்டும்.

முடிவுரை:- இந்த உருளைக்கிழங்கு அம்மைநோய் எளிதில் தடுக்கக்கூடிய ஒரு நோய். எனவே நோய்தடுப்பு மிகவும் இன்றியமையாதது. மேற்கூறியவாறு மருத்துவர்கள் குருதி நீர் ஆய்வாளர் குமுகாயத் தொண்டர்கள் ஆகியோர் ஒரு குழுவாக அமைந்து கொண்டு இந்நோய் மிகுந்துள்ள இடங்கட்குச் சென்று பராமரிப்பின் இந்நோயை எளிதில் கட்டுப்படுத்தலாம்.

வெளிநாட்டு மடல்:

பாவாணர் தமிழ் மன்றம், ஈப்போ

தமிழக முதலமைச்சர்க்கு விடுக்கும் வேண்டுகோள்!

சேரல்.

உயர்திரு சி. என். அண்ணாத்துரை அவர்கள்

தமிழக முதல் அமைச்சர். தமிழகம்.

மேற்பார்வை: தென்மொழி, கடலூர்—1 தமிழகம்.

பேரன்புசான்ற பெருந்தகையீர்!

தமிழகத்தில் மொழித்துறை ஆய்வாற்றி முது தமிழ்ப் பேரறிஞராய் இலங்கும் திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களைத் தாங்கள் அறிவீர்கள். அத்தகைய தமிழாண்மை மிக்க பெரும் புலவர் தமிழகக் கல்லூரிகளிலோ, பல்கலைக்கழகத்திலோ வாய்ப்பின்றித் தமிழ்ப் பகைவர்களால் ஒதுக்கப்பட்டு இருக்கின்றார். இது கால் குறள்நெறி செழிக்கக் கோலோச்சும் தமிழ்ப் பற்றுச் செறிந்த தங்கள் ஆளுகையில், மொழிப்பெரும் புலவர் பாவாணர் அவர்களுக்குத் தகுந்ததொரு வாய்ப்பு கிடைக்கும் - கிடைக்கவேண்டுமென்று பெரிதும் விழைகின்றோம். இனப்பற்றும், மொழிப் பற்றும் இல்லா முன்னைய அரசியலார் தமிழறிந்த தக்காரைப் பேணுதிழிந்தொதுக்கினர்.

"ஒருவரையொருவர் கெடுக்காமல் வாழமுடியும் — ஒருவரையொருவர் பகைக்காமல் வளரமுடியும்" என்ற தங்கள் நல்லறவுரைப்படி, பாவாணர் அவர்களின் இறுதி நாட்களிலாவது மன அமைதியோடு வாழும் நிலையினைத் தந்து அவரின் மொழி ஆய்வுத் திறன் தமிழுக்கும் தமிழர்க்கும் பயன்படுமாறு அருள்கனிந்து ஆவன ஆற்றுவீர்களெனக் கேட்டமைவதோடு, எதிர்வு நாளையில் தமிழகத்தில் நிகழவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டில் பாவாணர் அவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பினை நல்கும்படியும் கேட்டுக் கொள்கின்றோம். ஈப்போ, பாவாணர் தமிழ் மன்றம் சார்பாக,

27—6—67 பேராக், மலேசியா. இரா. தமிழழகன்.

எழுவதெந்நாள்?

—இலமையத்தமிழன்

திரைப்படத்துப் பாட்டெழுதும் தெளியார் தம்மைத்
தெரிந்தெடுத்துப் புகழ்கின்ருர்; தெளிந்தோர் தம்மின்
உரைசிறிதும் கொள்வதில்லை; உடலைக் காட்டி
உள்ளத்தைக் கெடுப்பவனை உவப்பார்; சென்னி
நரைத்திருக்கும்; திரைப்படத்தை நயவும் வேட்கை
நரைக்காது; நாட்பகலாய் நிற்பார்; நச்சுப்
புரைபடர்ந்த தமிழ்நாடே! பொய்மை வேட்கைப்
புறந்தள்ளிப் புத்தொளிபெற் றெழுவ தெந்நாள்?

உலையிலிட அரிசியின்றி ஒண்கா சென்னி
உயிர்மனைவி காத்திருக்க, உவகைப் பூக்க
அலையலையாய்ச் செல்கின்ருர் விடுதி கட்கே
அணையாத வெற்ருர வாரத் தோடு!
நிலையாத ஆடைகளின் நினைப்பில் என்றும்
நீந்துகின்ருர்; நல்லவரை நினைப்பில் வையார்!
இலையாகி இருக்கின்ற எம்தென் ஞடே!
எல்லார்க்கும் வாழ்வியற்றி எழுவ தெந்நாள்!

தமிழ்ப்பற்றி, தமிழர், தமிழ் நாட்டைப் பற்றித்
தரக்குறைவாய்ப் பேசுகின்ருர் தகவில் லாதார்!
அமிழ்தென்றல் வுரையெடுத்தும் அச்சுக் கோத்தும்
அளிக்கின்ருர்! ''அளக்கின்ருர்'' தமிழ்முச் சென்றே!
தமிழொன்றே தலையாய தென்ருேர் இன்று
தன்னலத்தால் தமிழ்க்கிழுக்குத் தேடுகின்ருர்!
அமிழ்கின்ற எழில் நாடே! அழிவைப் போக்கி
ஆன்ருேர்க்கே ஏற்றம்தந் தெழுவ தெந்நாள்?

அரைசியலின் நாகரிகம் அறியார்; காழ்ப்பால்
அடுத்தோரைப் பகைசெய்வார்; அவர்தம் வீட்டுப்
புரைநிறைந்த செய்திகளைப் ''பிட்டு வைப்பார்!''
புகழ்க்காகப் பண்பிழப்பார்; காசு சேர்க்கும்
வரைமட்டும் குறிக்கோள்என் வாழ்வே என்பார்;
வளர்ந்தவுடன் கொள்கைக்கு ''வணக்கம்'' சொல்வார்!
திரைமறைவுப் பழியொழித்துத் தமிழ்த்தென் ஞடே!
தெளிந்தோர்க்கே வலிமைதந் தெழுவ தெந்நாள்?

வீட்டுக்கோர் கட்சியென்றும் கழகம் என்றும்
விளையாடித் திரிகின்ருர்; மேடை ஏறிக்
காட்டுக்குள் கதறுகின்ற கரடி போலக்
கனைகுரலில் கத்துகின்ருர்; கற்ருேர் தாமும்
நாட்டுக்குள் இருக்கின்ருர் என்னும் உண்மை
நலிந்தோர்க்குத் தெரிவதில்லை நலன்கள் பூண்டே
ஏட்டுக்குள் வாழ்கின்ற எழிற்றென் ஞடே!
எளியோருக் கறிவுறுத்தி எழுவ தெந்நாள்?

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? — மூச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

தடைகளும் விடைகளும்

ஆக்கியோர்: திரு. புலவர் மாமணி, முரு. பழ. இரத்தினம் அவர்கள்
வெளியீடு: மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி; கோவை (மா. வ.)
விலை: உருபா 1-50.

தமிழ்நாட்டில் மெய்ந்நூற் பயிற்சியும், உண்மை வழிபாட்டாளரும் அருகிவருவதுடன் போலிச் சமயவாணரும், பொய்மை வழிபாட்டினரும் பெருகி ஆரவாரிக்கும் இக்காலத்தில் அகவளர்ச்சிக்கோர் அடிப்படையான மெய்ம்மைச் சமயநூற் பயிற்சியில் ஈடுபாடுவார்க்கும் அதன்கண் தாங்கொண்ட ஐயந் திரிபுகளை நீக்கிக் கொள்ள வேட்கை மீதூரப் பெறுவார்க்கும் பயன்படும் வண்ணம் இவ்வினாவிடை நூல் யாக்கப் பெற்றிருக்கின்றது. சமயம் பற்றிய பொதுவகை வினாவிடையே இவை யென்றும் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறைத்திரு மறைமலையடிகளார் மணிவாசகர் காலத்தைத் தக்க பல சான்றுகள் கொண்டு மலைமேலரணென நிலைபேறுறச் செய்திருப்பவும், அதன் சிற்சில பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும், வலிமையில்லாக் காரணங்கொண்டும் சிலர் கூறுவதுபற்றி அதனை மூவர்க்கும் பின்னதென்றலும், இன்னும் திருத்தொண்டர் வரலாற்றினும் திருவாரூர்ச் சிறப்பு, திருமலைச்சருக்கம் முதலிய சில பகுதிகள் இடைச்செருகலெனப் பழந் தமிழ்க் கொள்கையினால் தெளிவுறுத்தியிருந்தும் அதனை மறுக்காது வேறு காரணங்கூறிச் செல்வதும் குன்றக்கூறலாய் முடிந்து குழப்பத்தை விளைக்கின்றன.

செய்யும் செயல்களைக் கொண்டே இன்பதுன்பங்கள் செயல் செய்தார்க்குச் சேர்ப்பிக்கப்படுகின்றன. பொருளில் நல்லனவென்றும் தீயனவென்றும் இல்லை' தீவினையாலோ நல்வினையாலோ முன்னோர் பொருளீட்டியிருப்பின் அவ்வாறு ஈட்டிய செயலுக்காக அவர்கள் இன்பமோ துன்பமோ உறக்கடவர். அப்பொருள் கொண்டும் நாம் செய்யும் நல்வினை தீவினைக்கேற்பவே இன்ப துன்பங்களை நுகரக் கடவோம். இவ்வாறிருக்க ஒருவர் செய்யும் நல்வினை தீவினைப்பயன் முன்னோர் பின்னோர்க்கும் சென்று சேரும் என்பது (விடை கஎ) பொருத்தமாகத் தெரியவில்லை.

ஆளுடையரசர் முதலியோரும், பேயம்மையார், பட்டினத்துப் பிள்ளையார் முதலியோரும் தமக்கு அறிவும் ஆற்றலும் இருந்தும் திருவருள் தம்மை ஆட்கொண்ட பின்னரே பாடியருளியமையால் அவர்தம் அத்திரு நெறிய தமிழ்ப்பாடல்கள் கொண்டு அவர்கள் ஒரு நெறியே மனம் வைத்து மெய்யுணர்ந்தமை அறியமுடிகின்றது. ஆயின் இராமலிங்க அடிகளார் முதலியோர் திருவருள் ஆட்கொள்ளு முன்பே தாம் விரும்பிய வண்ணமெல்லாம் பாடத்தொடங்கி விட்டமை யால் முன்னொடுபின் முரணியும், நெறிபிறழ்ந்தும் இடர்ப்படுகின்றமை ஆழ்ந்து நோக்குவார்க்கு விளங்கும். கஎ–ஆம் வினாவுக்குச்சுற்றி வளைத்து விடைகூறி இடர்ப்படல் வேண்டப்படுவதன்று.

வராதல்லவா (வினா கரு) அரசினர் வழங்காது (விடை–சO) முதலிய பால்வழுக்கள் (உ, ந, அ, கஉ, நO, ருரு, ருசு) நீக்கத்தக்கன வாகும். இன்னும் மறைமலையடிகள் மன்ற வெளியீடான இந்நூலிலும் தாவரம், அனுபவம், ஆபத்து, தியானம், தோஷம் முதலிய பிற மொழிச் சொற்கள் கருக்கலிடுகின்றமையும், குடிப்பிறப்பின் அடிப் படையில் சாதியைக் குறிக்கும் பட்டங்கள் அறிவுடையோரால் வெறுக்கத்தக்கனவாயிருக்க, இந்நூலாசிரியர் அறிவாட்சிமிக்காராய் இருந்தும் செட்டியார் என்னும் பின்னொட்டினைக் கைவிடாது ஒட்டிக் கொண்டுள்ளமையும் விலக்கி யொழிக்கற் பாலனவாகும்.

நூல் வினாவிடையமைப்பு முறையில் அமைக்கப்பட்டிருப்ப தாலும் காலத்துக்கேற்ற உவமை, மேற்கோள்கள் கொண்டு விளக்கி யுள்ளமையாலும் யாவரும் படித்துப் பயனடைதற்கு ஏற்றதாய் விளக்கமாக இருக்கின்றது.

— இறைக்குருவன்.

நினைவும் மறதியும்

ஆசிரியர்: முகமது செரீப், பி. ஏ. பி டி.,
செய்தம்மாள் உயர்பள்ளி, இராமநாதபுரம்.

(மூவர் பதிப்பகம், புதுநகர். காரைக்குடி–1.) விலை உருபா ஒன்று.

மேலை நாடுகளில் மனவியல் தொடர்பான சிறந்த நூற்கள் ஆயிரக் கணக்கில் வெளிவந்துள்ளன; வந்து கொண்டிருக்கின்றன. தமிழில் அவ்வாறுன நூற்கள் மிகவும் குறைவு. முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. அத்தகைய முயற்சிகளுள் ஒன்று என்ற முறையில் 'நினைவும் மறதியும்' என்ற இந்நூல் வரவேற்கத் தகுந்ததாகும். நினைவாற்றலின் பயனையும், இன்றியமையாமையினையும், நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளையும் ஆசிரியர் கூறிச் செல்கின்ருர். நினைவின் தன்மை, மறதியின் தன்மை, மறதிக்குக்காரணங்கள் முதலியவும் கூறப்படுகின்றன. பல சிறுசிறு தலைப்புகளில் ஆசிரியர் பொருளை வகுத்துக் கொண்டுள்ளார். ஆயினும் ஓர் அறிவு நூலுக்கு வேண்டிய திட்பம், தெளிவு, சுருக்கம் முதலியன இந்நூலில் இல்லாமை இதன் குறையே. கூறவேண்டியவற்றை நிரல்பட வரையறுத்துக் கொள்ளாமையால் தலைப்புக்குப் பொருத்தமில்லாத செய்திகளும், கூறியது கூறலும் ஆங்காங்குக் காணக்கிடக்கின்றன. நடையும் திருத்தமாக அமைந்திலது

மற்றுமொன்று; இந்நூலுக்கு அணிந்துரை, மதிப்புரை, கருத்துரை, பாராட்டுரை, வாழ்த்துரை என்ற பெயர்களால் பல வெற்றுரைகள் வழங்கப் பெற்றுள்ளன. ஒரு சிறு நூலுக்கு இத்தனை 'உரை'கள் தேவையில்லை. நூலாசிரியன் தன்னைவிடப் பெரியவர் என்று எவரையும் மதித்தல் கூடாது. அத்தகு பெருமிதம் அவனுக்கு வேண்டும். (இது வீண் பெருமையோ, செருக்கோ அன்று; அவனின் நூல் செப்பமும், சிறப்பும் உண்மையும் வாய்ந்ததாகவிருந்து, தான் ஒரு வினையினைச் சரிவரச் செய்து முடித்தோம் என்ற உணர்வு அவனுக்கு ஏற்படும் பொழுது இப்பெருமிதம் தானே அவனுக்கு அமையும் அப்பொழுது அவன் எவர் பாராட்டுரைக்கும் அங்காந்து நில்லான்) அஃதில் வழி இப்போலி உரைகள் சான்ருேர் முன் நூலின் மதிப்பைக் குறைக்கவே பயன்படுகின்றன.

மறுபதிப்பில் ஆசிரியர் இப்போலியுரைகளை அகற்றிவிட்டுச், செய்திகளையும் வரையறுத்து, வேண்டாதவற்றைக் குறைத்துத் திருத்தமுடன் நூலை வெளியிட வேண்டுகின்ருேம். இத்துறையில் மேலும் பல முயற்சிகளைத் திருத்தமாக ஆசிரியர் மேற்கொள்ளவும் வேண்டுகின்ருேம்.

– கல்லாடன்

(ஒரு கட்டுரை மடல்)

வி. இரா. சந்திரன், க. இ. (B. A.)

கிரி – மற்ருேர் அரசியல் நரி!

'தென்மொழி' என்ருெரு திங்களிதழ் இருப்பது இன்றே எனக்குத் தெரிந்தது. அதன் 1966–திசம்பர் வெளியீட்டின் 'இராசாசி ஓர் அரசியல் நரி' என்ற ஆசிரியவுரை கண்டு இறும்பூதெய்தினேன். நம் நாட்டு அரசியலில் ஏறத்தாழ அரை நூற்ருண்டு ஈடுபாடு கொண்டுள்ள எனக்கே, தங்களிதழ் போன்ற உண்மை விளம்பி பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பின்மைக்கு – விளம்பரத்தில் நம்மனோர்க்குள்ள ஆர்வமின்மையே காரணம். இவ்வாறுதான் இந்நூற்ருண்டைய தொடக்கத்திலிருந்தே, திரவிடப் பெருங்குடி மக்களைத் தட்டியெழுப்ப உண்மையான மக்கள் நலத் தொண்டர்களான மதிமிகு. பி. தியாகராயர், பர். டி. எம். நாயர் போன்ற மாபெரும் திரவிடப் பேரறிஞர்களால் வித்திடப் பெற்று, முளைத்தெழுந்த ஒப்புரவுக் கட்சி (Justice Party) யின் நாளிதழ்களான – ஒப்புரவு (Justice), திராவிடன், 'ஆந்திர ஒளி விளக்கம்' (ஆந்திரப் பிரகாசிகா) – என்ற தலைசிறந்த வெளியீடுகளும் நிலைக்காமல் மறைந்தே போயின. எஞ்சியது 'விடுதலை' – என்னும் 'திராவிடனின்' மறுபிறவி என்னலாம்.

தாங்கள் குறிக்கும் 'அரசியல் நரிதான்' எனக்குத் தெரிந்த மற்ருெரு நரி பற்றி எழுதத் தூண்டியது. இரு மன்னர்களைத் தேர்தலில் வீழ்த்திய 'மன்னாதி மன்னன்' என இன்றையத் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரியை வானளாவப் புகழ்ந்து – 'அருண்' எனும் புனைபெயருடைய ஒருவரால் தீட்டப்பெற்ற கட்டுரையொன்று, 'தினத்தந்தி' ஏட்டில் வந்திடக்கண்டு திடுக்கிட்டுப்போய், 1937 பொதுத் தேர்தலில், உண்மை மேலோரான ஒப்புரவுக் கட்சித் தலைவரும், முதலமைச்சருமான பொப்பிலி மன்னரையும், அவரின் சிறந்த கட்சியையும் வீழ்த்திடப் பார்ப்பனக் குள்ளநரிகளான கிரியும், நேருவும், சரோசினி தேவியும், எத்தகைய பழி, கரிசுகளுக்கும் அஞ்சாத கோழைத்தனமான, இழிஞன் 'இயேகோ' முறைகளைக் கையாண்டன

ரென்னும் ஒரு கட்டுரையை நான் மேற்படி 'தினத்தந்தி'க்கு எழுதிக் கிட்டத்தட்ட ஒரு மாதமாகியும் அந்த 'புது' (!) தேசிய ஏடு வெளியிடுவதாகக் காணோம்! பார்ப்பனர்களின் சூழ்ச்சியைவிட, இத்தகைய குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் புறப்படும் வீணன்களும், பிரகலாதன்களும், அநுமன்களுந்தாம் இந்நாட்டு வரலாறு முழுதும் நம்மனோரைத் தாழ்த்தி-வீழ்த்திக்கொண்டு வந்திருக்கும் வழிவழிச் சூழ்ச்சிக்காரர்களுக்குத் துணைபோகும் கோடரிக்காம்புகளெனத், தாங்களும் எடுத்துக் காட்டியுள்ளதற்கு இதுவுமொரு சான்றாகும். இனி, செய்திக்கு வருவோம்.

1937 பொதுத்தேர்தல் – பொப்பிலி தொகுதி – ஒப்புரவுக் கட்சி வேட்பாளர் பொப்பிலி மன்னர். பேராயக்கட்சி வேட்பாளர் வி. வி. கிரி. ஒரு நாள் காலை 10 மணி. அந்நாள் உள்ளூர் கோயில் திருவிழா ஊர்வலநாள். கடைத்தெருவில் நடுவீதியில் பேராயக் கட்சிக் கூட்டம். பேராயக்கட்சித் தலைவர் நேருவும், சரோசினி தேவியும் (பாட்டுக்குயில்தான்!) பேசுபவர்கள். வழக்கம்போல் இரு கோயில் யானைகள் முன்னேயும் உள்ளூர்க் கடவுள் பின்னேயுமாக, ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. ஊர்வலம் கடக்கும் வரை, சற்றே வழிவிட்டுப் பின்னர் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துங்களென்று, கோயில் அறநெறித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதையும் மதிக்காமல் ஊர்வலம் நெருங்க நெருங்க, சொல்லி வைத்தாற்போல் கூட்டத்தினர் குபீரென்றெழுந்து திக்கெட்டும் ஓடி மறைந்துகொள்ளும் நாடகமே நடித்துக் காட்டினர். அன்று மாலையே – 'மாந்தருள் மாணிக்கம்' – 'ஆசியாவின் ஒளி' — 'இந்தியத் தாயின் தலைமகன்' சவகர்லால் நேருவும், இந்திய நாட்டு இசைக்குயில் சரோசினி தேவியும் பேசிக்கொண்டிருந்த தேர்தல் கூட்டத்தைக் கோயில் யானைகளை ஏவிவிட்டு அச்சுறுத்திக் கலைத்த– கொடுங்கோலனான பொப்பிலி மன்னனுக்கா உங்கள் ஒப்போலை ? அன்னானைத் தலைவனாகக் கொண்ட நாட்டின் பகைக் கும்பலான ஒப்புரவுக் கட்சிக்கா உங்கள் ஒப்போலை?'' – என்று முழுப்பக்கத்தில் பெரிய தலைப்பிட்டுப் பொதுத்தேர்தல் முடியும்வரை, புற்றீசல் போன்ற பேராயக் கட்சித் தாள்களில் எழுதித் தூற்றி, ஏதுமறியாப் பொது மக்களிடம் வெறுப்பையும் சினத்தையும் மூட்டி, அந்த நல்லவரையும் அந்த நல்ல கட்சியையும் தேர்தலில் ஆறடிக் குழி தோண்டிப் புதைத்தேவிட்டனர், இந்தக் பேராயக்கட்சி நாடோடிகள்! அதற்குக் கிரி உள்ளோடி.

அன்று பொதுவாழ்வுக்கு முழுக்குப் போட்ட பொப்பிலி அரசர், இன்றுவரை இப்பேயர்களின் 'வண்ணமுகத்தை'க் காணநேருமே என நாணி வெளிக் கிளம்புவதே இல்லை.

பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே! மெய்போலும்மே!
மெய்யுடையொருவன் சொலமாட்டாமையால்
பொய்போலும்மே! பொய்போலும்மே

எவ்வளவு பொருத்தம் பாருங்கள், நம் நாட்டு வரலாற்று நடப்புக்கு – இப்பெரும் புலவனின் அழுகுரல்!

ஆயின் ஓர் ஆறுதல் – வாய்மை என்றேனும் ஒருநாள் வெல்லும் – என்பதற்கேற்ப மூன்று பத்தாண்டுகட்குப் பின்பாவது, இத் தமிழ் மண்ணிலாவது சற்றேனும் ஐயத்துக்கிடமில்லையென்ன அப் பெருந்தகையான பொப்பிலி மன்னனிடமும், அதன்பின் ஒப்புரவுக் கட்சித் தலைவரான பெரியாரிடமும் அரசியல் முதலிய பயிற்சி பெற்ற அறிஞர் அண்ணா ஆட்சி இன்று தோன்றியிருப்பதானது, "பழிக்குப் பழி கொடடா பழிகாரப் பாண்டியனே!" – என்ற கண்ணகியின் மறவுணர்வுக் கதையை நம்மனோர்க்கு நினைவூட்டி எதிர்காலத்திலாவது இத்தகைய பேராயக் கட்சி விளம்பரப் பூசலர்களிடம் எச்சரிக்கையாய் இருக்கும்படி தெய்பூட்டாமல் போகுமா என்ன ?

விரல்நுனி மண்படாமல் கவலையற்ற வாழ்க்கை நடத்தக் கற்றுக் கொண்ட வழிவழிக் கும்பலான பார்ப்பன இனத்தைச் சேர்ந்த கிரியின் அரசியல் வாழ்க்கையை, உழைக்காமல் போனால் சோறில்லை என்னும் பாட்டாளி மக்களாம் தொழிலாளரியக்கத் தலைமையைப் பிடித்தே — அமைச்சராய், பன்னராய் (தூதுவர்), ஆள்நராய் (கவர்னர்) இன்று துணைக்குடியரசுத் தலைவராய், ஓர் ஏணியை விட்டு மற்றோர் ஏணி ஏறித் தன் வாழ்க்கையையும், தன் பார்ப்பன இனத்தையும் வளப் படுத்திக் கொண்டாரே யொழிய, நம்மனோரான பாட்டாளி மக்களின் பசியும் பட்டினியும் ஏழ்மையும், எச்சிலை பொறுக்கும் நிலையும் மாற என்ன செய்தார் என விரல் விடமுடியுமா ? நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்த கதைதான் – இத்தொழிலாளர் தலைவன் கிரியின் கதையும் ! O

முதற்கடன்

"சால்பு மறந்து தன்மதிப் பிழந்து
வாய்மை அழித்து வஞ்சகம் வளர்த்தே

அடிமை நிலையில் அலைமோதி நின்றும்
படிப்படி யாகப் பலரை மயக்கி

எப்படி யாவது இன்பமும் பொருளும்
கைப்பற்றிக் கொண்டு காலம் வந்தால்

பதவியும் பெறுவோம் பதவிக் காக
இதுநன் றிதுதீ தென்பதொன் றின்றித்

துணைவகைத் தோழரைத் தொண்டரை யெல்லாம்
கணப்பொழு துக்குள் காட்டிக் கொடுப்போம்

நாடென்ன! மொழியென்ன! நாம் வாழ்ந்தால் போதும்
வேறென்ன! இந்த வினைவினை யெல்லாம்

வெளிப்படச் சொல்லும் மனத்தினர் உளரேல்
பழிச்சுமை ஏற்றிப் பலப்பல பேசி

வாயா லடித்து வாய்மையை ஒழிப்போம்
தூயராய்ச் சிறந்த தொண்டராய் வாழ்தல்

பேதைமை! மடமை!! பெரும்பிழை!! " – என்றெலாம்
நாள்தவ றுமல் நன்கு நினைத்துப்

பழகிக் கொண்ட பாழுங் கயவர்கள்
முழுச்சீர்த் தமிழ்க்கும் தமிழ்முது குடிக்கும்

நலம்செய நினைப்பதும் நலங்கள் செய்வதும்
விளங்கச் சொன்னால் வெண்முயற் கொம்பே.

இத்தகு கயவரின் பொய்ப்போர்வை கிழித்தல்
முத்தமிழ் விரும்பும் முனைவர்க்கு
முதற்கட னாகும் முந்துக உடனே!

பொற்கோ

திருவள்ளுவரின் திருவுள்ளம்.

அவ்வாறு தோன்றுவது நல்லதுதான். உப்பானது உணவுக்குச் சுவை தருவதுபோல் பிணக்கும் பூசலும் வாழ்க்கை இன்பத்துக்குச் சுவையூட்டுவவாக இருக்கும். ஆனல் அந்தப் பூசலும் பிணக்கும் அளவோடு இருக்கவேண்டும். அவை வளர்ந்து முதிர்ந்து காதல் வாழ்க்கையையே பயனற்றதாக்கிவிடக் கூடாது. கணவன் மனைவியரிடையே ஏற்படும் ஊடல் அளவோடு இருப்பதானது, உணவில் உப்பு அளவோடு இருப்பதுபோல் சுவையாக இருக்கும். அந்த ஊடலை அளவு கடந்து நீள விடுதலானது, உணவில் உப்பு மிகுதியாகி விடுவதைப் போன்றது என்பதைக் கணவன் மனைவியர் உணர்ந்து வாழ வேண்டும் என்கிருர் திருவள்ளுவர்.

"உப்பு அமைந்தற்ருல் புலவி அதுசிறிது
மிக்கற்ருல் நீள விடல் — குறள் 1302.

பிணக்கோ பூசலோ ஏற்படுகின்றபொழுது யாருக்கு யார் விட்டுக் கொடுப்பது என்று பார்க்கக் கூடாது. ஊடலில் யார் விட்டுக் கொடுத்துத் தோற்கிருர்களோ அவர்களே உண்மையில் வெற்றி பெறுபவர்களாவர்.

"ஊடலிற் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்" –குறள் 1327.

மனைவிக்குப் போய் நாம் விட்டுக் கொடுப்பதா என்று கணவன் நினைக்கக்கூடாது. விட்டுக் கொடுப்பது என்பது ஒரு பெரிய பண்பாகும் என்பதை அறியவேண்டும். தனக்கு நிகரில்லாதவர்களிடம்–தன்னைவிட வலிமை குறைந்தவர்களிடம்–தோல்வியை ஒப்புக் கொள்வதுதான் சான்றாண்மையாகும். சால்பு என்னும் நிறைந்த பண்புக்கு ஓர் உரைகல் போன்று இருப்பது எஃது என்றால் தனக்கு ஒப்பில்லாதவர்களிடமும் தோல்வியை ஏற்றுக்கொள்வதுதான்.

"சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்" –குறள் 986

ஊடலில் மனைவிக்கு விட்டுக் கொடுப்பது என்பது வேறு. எப்போதும் மனைவிக்குக் கீழ்ப்படிந்து அவள் சொற்படியே நடப்பது என்பது வேறு. முன்னது சான்றாண்மை; பின்னது பேதைமை. மாந்தன் சான்றாண்மை உடையவனாக இருக்கவேண்டுமே தவிர பேதைமையுடையவனாக இருக்கக் கூடாது. மனைவியின் விருப்பப்படியெல்லாம் ஆடுபவனாக, மனைவிக்கு அஞ்சி அடங்கி நடப்பவனாக, அவளுக்கு ஏவல் செய்பவனாக மாந்தன் இருக்கக்கூடாது. அப்படி இருப்பவன் அறச் செயல்களை நன்கு செய்யமுடியாது, பெருமையுடையவனாக வாழ முடியாது. பிறர் முன்னிலையில் தலை நிமிர்ந்து செல்பவனாக இருக்க முடியாத அவனால் தன் நண்பர்களுக்கும் ஓர் உதவி செய்ய முடியாது. அப்படிப் பெண்ணுக்கு ஏவல் செய்து வாழ்கின்ற ஆண்மையைவிட நாணமுடைய பெண்மையே பெருமையுடையதாகும், என்கிறார் திருவள்ளுவர்.

"நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்" –குறள் 908

"பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து" –குறள் 907

கணவன் மனைவியராக வீட்டில் இருந்து வாழ்கின்ற அக வாழ்க்கையிலும் சரி, குமுகாயத்தின் உறுப்பினர்களாக இருந்து வாழும் புற வாழ்க்கையிலும் சரி, அன்பு இருக்க வேண்டும். அன்பு இருக்கின்ற இடத்தில் பொறுமை இருக்கும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இருக்கும். கருத்து வேற்றுமையை மதிக்கும் பண்பு இருக்கும். அங்கே

வெறுப்பு இருக்காது. காலஞ்சென்ற 'வ. ரா.' என்பவர் "அன்பு இருக்கின்ற இடத்தில் குத்தலாகப் பேசிய வாயை முத்தமிடத் தோன்றுமே ஒழிய ஊசிநூல் போட்டுத் தைத்துவிடத்தோன்ருது." என்பார். அதாவது அன்பு இருந்தால் அங்கே வெறுப்பும் சினமும் தோன்றவே தோன்ருது என்பதை அப்படிக் குறிப்பிடுகிருர். வெறுப்புக்கும் சினத்துக்கும் இடமில்லாத அந்த அன்புதான் சான்ருண்மையின் முதல் படியாகும்.

இரண்டாவதுபடி நாணம் என்பது, மாந்தன் நாணமுடையனுக இருக்க வேண்டும். பெண்களுக்குத்தானே நாணம் இருக்க வேண்டும்; ஆண்களுக்குமா நாணம் வேண்டும்? என்ருல் பெண்களிடம் அமைந்து பெண்மைக்கு அழகு செய்யும் நாணம் என்பது வேறு, செய்யத்தகாத செயல்களைச் செய்வதற்கு அஞ்சி வாழும் தன்மையாகிய ஆண்மைக்கு அழகு செய்யும் நாணம் வேறு என்கிருர் திருவள்ளுவர்.

"கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற" —குறள் 1011.

உலகத்தில் சிலர் அச்சமில்லாமல் நாணமில்லாமல் தவருன வழியில் செல்கிருர்கள். பிறர் என்ன நினைப்பார்கள் என்ன சொல்வார்கள் என்று அவர்கள் கவலைப்படுவதே இல்லை. அப்படிக் கவலைப்படாமல் இருப்பதை அவர்கள் பெருமையாகவும் கருதுகிருர்கள் தவருன வழியில் செல்ல அஞ்சிச் செல்லாமல் இருப்பவர்களைப் பார்த்து அவர்கள் எள்ளி நகையாடுகிருர்கள். அத்தகையவர்கள் அறியாமையுடையவர்களே அன்றி அறிவுடையவர்கள் ஆகமாட்டார்கள் என்கிருர் திருவள்ளுவர். அஞ்சவேண்டியதற்கு அஞ்சி வாழ்வதுதான் அறிவுடையோர் செயல்" என்கிருர்.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்" —குறள் 428.

இந்த உலக வாழ்க்கைக்குப் பொருள் தேவை என்பதைத் திருவள்ளுவர் அறியாதவர் அல்லர். அருள் இல்லாதவர்களுக்குச் சான்ருேர் உலகில் இடமிருப்பதில்லை. அஃது எப்படி யென்ருல் பொருள் இல்லாதவர்களுக்கு இந்த நில உலகத்தில் இடமில்லாதிருப்பதுபோல்" என்கிருர்.

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" —குறள் 247.

பொருள் உடையவர்களைத்தான் எல்லாரும் மதிப்பர். எல்லாரும் போற்றுவர். பொருள் இல்லாதவரை யாரும் மதிக்கமாட்டார்கள் போற்றமாட்டார்கள். இகழ்ந்தும் பேசுவார்கள். இஃது உலகத்து இயற்கை என்கிறார்.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு" —குறள் 752.

ஆனால் பொருளுக்கு இவ்வளவு சிறப்பு இருக்கிறதே என்று பொருளை எந்த வழியிலாவது ஈட்டலாமா? பிறரை ஏமாற்றிப் பொருள் சேர்க்கலாமா முறையற்ற செயல்களைச் செய்து பொருளைக் குவிக்கலாமா? என்றால் கூடவே கூடாது என்கிறார் திருவள்ளுவர். அன்போடும் அருளோடும் சேர்ந்து வராத பொருள் என்றால் அதனை ஏற்கக் கூடாது. அன்பையும், அருளையும் அழித்துச் சேர்க்கின்ற செல்வம் என்றால் அதனை விரும்பக்கூடாது. வெறுக்க வேண்டும். புறக்கணித்து விட்டுவிட வேண்டும் என்கிறார்.

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்" —குறள் 755.

நடு நிலைமை தவறிய நெறியில்-முறையற்ற அறமற்ற வழியில் வருகின்ற செல்வம் நன்மை செய்யாது. அது நன்மையைச் செய்வதாக இருப்பினும் அதனை நாம் பெறக்கூடாது. நடுநிலைமை தவறி வரும் ஆக்கம் என்று தெரிந்தால் அதனை அப்போதே கைவிட்டுவிட வேண்டும். ஆக்கம் என்பது செல்வத்தை மட்டும் குறிப்பதன்று. செல்வாக்கை, உயர்வை, அதிகாரத்தை யெல்லாம் குறிப்பது. நாம் செல்வாக்குப்பெற்றுவிட்டால், அதிகாரம் நம் கைக்கு வந்துவிட்டால்,பதவியில் நாம் உயர்ந்து விட்டால், எவ்வளவோ நன்மைகளைச் செய்யலாம். நடுநிலைமை தவறாமல் நடக்கலாம்; நேர்மையையும் நாணயத்தையும் போற்றி வாழலாம். ஆனால் அந்தச் செல்வாக்கையும் உயர்வையும் அதிகாரத்தையும் நேர்மையான வழியில் பெறுவதென்பது எளிதாக இல்லையே; நேர்மைதவறிய வழியில் பெறுவதுதானே எளிதாக உள்ளது. மேலே போவதற்கு மட்டும் முதலில் ஒரு சிறு தவறு செய்தால் என்ன ? பிறகு தவறே செய்யாமல் இருக்கலாம். நன்மையே செய்யலாம் என்று நினைத்தும் ஆக்கத்தை எப்படியேனும்பெற முயலக்

கூடாது. நேர்மையற்ற அறமற்ற வழியில் உண்டாகும் ஆக்கம் என்றால், அந்த ஆக்கம் நன்மையே செய்யக் கூடியதாயினும், அதனை அன்றே அப்போதே ஒழிய விட்டுவிட வேண்டும்.

"நன்றே தரினும் நடுவு இகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்" —குறள் 113.

பழியோடு சேர்ந்து வருகின்ற ஆக்கத்தைவிட — உயர்வைவிட — செல்வத்தைவிட சான்றாண்மைப் பண்போடு வாழ்கின்ற வறுமை நிலையே— தாழ்ந்த நிலையே மேலானதாகும் என்பதை நாம் நன்கு உணர வேண்டும்.

"பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை" —குறள் 657.

இந்த உலகத்தின் ஆட்சியே நம் கைக்கு வருகிறது; ஆனால் அது பழியோடு சேர்ந்து வருகிறது என்றால்—அதனை மேலோர்கள் ஏற்கமாட்டார்கள் என்று புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறான், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் மன்னன்.

"பழியெனின்
உலகொடு பெறினும் கொள்ளலர்" —புறம் 182.

அகநானூற்றுப் புலவர் ஒருவர் சொல்கிறார்: "சான்றோர்கள் ஒரு பொருளின் மேல் எவ்வளவுதான் காதலுடையவர்களாக இருப்பினும், அந்தப் பொருளைப் பெறுவதால் உண்டாகும் இன்பம் ப ழி யோ டு சேர்ந்துதான் வரும் என்றால் அதனை அவர்கள் வெறுக்காமல் விரும்ப மாட்டார்கள்."

"கழியக்காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்" —அகம் 112.

பழியையும் கரிசையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு வருகின்ற எதனையும் சான்றோர்கள் செய்யமாட்டார்கள். தாங்கள் அறிய நேரினும், அந்த அறிவிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக என்றும் அத்தகைய செயலைச் செய்யமாட்டார்கள் என்கிறார் நாலடியார்ப் புலவர்.

"பாவமும் ஏனைப் பழியும் படவருவ
சாயினும் சான்றவர் செய்யார்" —நாலடியார் 295.

நேர்மை, நாணயம், நடுநிலைமை, அறச்செயல், நல்வினை என்றெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் பொருள் வந்து சேர்வதில்லையே! இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு வாழ்பவர்கள் வறுமையில் தானே கிடந்து உழல நேர்கிறது? பிறர் இகழ்ந்து பேசுகின்றவகையில் பொருள் இல்லாதவராக வாழ்வது இழிவு அன்றோ? என்றால் இழிவு அன்று என்று சொல்கிறார் திருவள்ளுவர். சால்பு என்கின்ற நிறை குணத்தையும் அந்த நிறை குணத்தோடு அறநெறி பிறழாது வாழும் உறுதியையும் ஒருவர் பெற்று விடுவாரேயானால் பொருளில்லாத வறுமைநிலை என்பது இழிவு அன்று என்கிறார்.

"இன்மை ஒருவர்க்கு இழிவன்று சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்" —குறள் 988

மாந்தன் தன் வயிற்றுக்காக என்றுகூடத் தவறு செய்யக் கூடாது. நாவாரச் சுவைத்து வயிறார உண்ணவேண்டும் என்பதற்காகக்கூட ஒருவன் பிறரை ஏமாற்றி வஞ்சித்து உழைக்காமல் பிழைக்க நினைக்கக் கூடாது. நேரிய வழியில் உழைத்துப் பெறுகின்ற பொருள் எவ்வளவு சிறியதாயினும் அந்தப் பொருளால் கூழ் தான் குடிக்க முடியும் என்றாலும் அதைத்தான் விரும்ப வேண்டும். தவறுகளைச் செய்து கரவான வழியில் பொருள் ஈட்டி அறுசுவை உணவை உண்பதைவிட, தவற்றுக்கு இடம் தராமல் உண்மையான வழியில் உழைத்துப் பொருளீட்டி அந்தப் பொருளால் தெளிந்த நீர் போலக் காய்ச்சிய கஞ்சியையே குடித்தாலும் அதைக் காட்டிலும் மிகவும் இனிமையானது வேறு ஒன்றும் இல்லை என்கிறார்.

"தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள் தந்தது
உண்ணலின் ஊங்கினியது இல்" —குறள் 1065.

இப்படிக் கஞ்சியிலும் சுவை காண்பதற்கு—வறுமையிலும் இன்பம் காண்பதற்கு—பழிக்கு அஞ்சி வாழ்கின்ற பண்பு இருக்க வேண்டும். செய்யக்கூடாததைச் செய்வதற்கு நாணுகின்ற நாணம் இருக்க வேண்டும். எப்படி உயிர் என்பது உடம்பைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டுள்ளதோ அப்படியே சான்றாண்மை என்பது இந்த நாணத்தையே தனக்கு இருப்பிடமாகக் கொண்டுள்ளது.

"ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண் என்னும்
தன்மை குறித்தது சால்பு" —குறள் 1013.

(வளரும்)

Bharathidasan.

ஆங்கில மொழியாக்கம்

THE SUN

You are a thing of light, O sun, a peerless one among the spheres–a thing of fire that sets the heart rejoicing and dancing. You emerge out of the deep waters; you scatter gold all over the sky and illuminate the surf.

The slumbering creatures awake and with the darkness, their weariness is gone, when O Light, you come up and are everywhere. Wherever you are, there is animation. O lord of light, every beam of yours climbs the heavens and travels towards the west and ends in a lighting streak. O, what a myriad-coloured sight !

You are a lion with a full-fledged, flowing, fresh mane of light. You are a never dying ball of fire that burns the very heavens Vehemently. You are a hill of ruby; a plate of spotless gold; a big flame in the lamp of the sky.

You outstretch a million arms towards the sea and million other arms of light you extend over the sky. In between them, there is no mountain, nor jungle, nor house. nor pool, nor river that is not bathed in your light Hail to you, O sun !

It is a wonderful sight to see the sea gliding, the sun beams dancing on the clear water. The sea is like a beautiful cloth trembling in the wind-a cloth made of cotton thread interwoven with fibres of gold. Your rays penetrated into the Jack fruit of darkness and took out the kernals of light.

You eat with your young rays the glistening pearls of dew. You emit light and beauty in an array of waves. You kiss the moisture off the leaves and preserve their natural colour and warmth. You bathe the mountains and the meadows is your golden water of light.

You make the lotus buds unfold their petals. You made emerald out of the tender mango leaves. Even in the comb of the cock the beauty is yours. You are a monarch; the lord of light. All people hail you.

You put life on the wings of birds and they rose at once. You give the women the strength of virtue. You dwell on the hill-like shoulders of men. You animate the calves and cows. You are a source of pleasure to the heroic Tamil people.

When your light is absent the planets of the sky are dreb and dull when life became arid you came and cultivated it. You are at the root of all sustenance. You are a blanket to keep off cold.

O widening light at whom the eyes connot look straight; You are a spirit that removes all fatigue. You bush aside the darkness of the world and bring down the roaring flood of fire. We thrive on your sunshine. O fresh one, you are a treasure to every one. May you prosper!

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

த. சலாவுத்தீன், அறி. இ; ஆ. ப.

இயற்கையில் தாக்குதலும் தற்காப்பும்.

வாழ்க்கைப் போராட்டத்தில் மாந்தர்கள் வெற்றியுடன் வாழ வேண்டுமென்றால் தாக்கவும், பிறரிடமிருந்து தற்காத்துக்கொள்ளவும் தெரியவேண்டும். இயற்கையில் பல உயிரினங்கள் பலமுறைகளைப் பயன்படுத்தித் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர் நீச்சலடித்து வெற்றியுடன் வாழ்கின்றன. ஒவ்வோர் உயிரினமும் ஒரு குறிப்பிட்ட முறையில் தன்னைக் காத்துக்கொண்டு பிறவற்றைத் தாக்குகின்றன. இதற்காகச் சில பற்களையும், சில உகிர்களையும், சில தோலையும், சில கொடுக்கையும் பயன்படுத்துகின்றன. இவை அனைத்திலும் சிறந்து விளங்குபவை தந்திரமாக நஞ்சைப் பயன்படுத்தித் தாக்குபவைதான்.

சில உயிரினங்கள் தங்களுக்கு ஏதம் நேரிடப் போகின்றதென்று தெரிந்தவுடன் நஞ்சைக் கக்குகின்றன. சில கடிக்கின்றன; மற்றும் சில கொட்டுகின்றன. மற்றவை தங்கள் குருதியாலும், தோலினாலும் நச்சுக் காற்றாலும் தாக்குகின்றன. அல்லது தங்களைக் காத்துக்கொள்கின்றன.

மாந்தர்களால் மிகுதியும் வெறுக்கத்தகுந்ததும் அஞ்சி நடுங்கும் தன்மையுள்ளதுமாய் உள்ள உயிரினம் பாம்பாகும். நம் நாட்டில் பாம்பைக்கண்டு எவ்வளவில் நடுங்குகிறார்கள் என்பதைக்காட்ட, அவற்றிற்காக அமைக்கப்பட்டுள்ள கோயில்களைக்கண்டும் அவற்றிற்காக நடத்தப்படும் வழிபாடுகளைக் கண்டும் தெரிந்துகொள்ளலாம். பல இடங்களில் மிகக் கொடுமையான நஞ்சைக்கொண்ட பாம்பிற்குப் பாலையும் முட்டையையும் வைப்பதே அவர்களின் அச்சத்தைக் காட்டுகின்றது. ஆனால் இதே பாம்பு தங்கள் வீட்டுப்பக்கம் வந்தால் அதை உயிரோடு விடுவதில்லை. இங்கேயாவது அதை வணங்காமல் விடுகிறார்களே ! !

பாம்புகளில் ஏறத்தாழ 3000 வகைகள் இருக்கின்றன. இதில் மிகவும் நஞ்சுள்ளவை ஏறத்தாழ 300 வகைகள்தாம். இவற்றிலும் கொடிய நஞ்சை உடைய பாம்புகள் கடல்களிலும் ஆறுகளிலும்தாம் இருக்கின்றன. பாம்புகளின் நஞ்சு இருவகைப்படும். ஒன்று "நரம்புத் தாக்கி" (Neurotoxin) எனப்படும். இது நரம்புகளின் வேலையை ஒடுக்கிவிடும். இரண்டாவது "குருதி முறிப்பி" (Haemotoxin)எனப்படும். இவ்விருவகை நஞ்சுகளையும் ஏறத்தாழ எல்லா நச்சுப் பாம்புகளும் உடையவாய் இருக்கின்றன. இவ்வகை நஞ்சு பாம்பின் இரையைத் தாக்கினால் அஃது உடனே இறந்துவிடும். நரம்புத்தாக்கி மிகுந்த வலியையும் வீக்கத்தையும் உண்டாக்கி, ஒருவகை இழுப்பை உண்டாக்கிவிடும். இதனால் நுரையீரல்களும் நெஞ்சாங்குலையும் வேலை செய்யாமல் நின்றுவிடும்.

ஆப்பிரிக்காவில் உள்ள மரப்பாம்பு (Tree Snake) குச்சிப்பாம்பு (Twig Snake) ஆக இரண்டுவகைப் பாம்புகளும் தங்கள் வாயின் பின் பக்கத்தில் நஞ்சை வைத்திருக்கின்றன(Back-fanged). தெற்கு, நடு, கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மரப்பாம்பு பறவைகள், பல்லிகளை உண்கின்றது. சில நேரங்களில் நாய்கள், ஆடுமாடுகள், மாந்தர்களையும்கூடத் தாக்குகின்றன. இப்பாம்பு பச்சை வண்ணத்தில் கருப்புப் புள்ளிகளை உடையதாக இருக்கும். ஏறத்தாழ மூன்று அடிக்குமேல் நீளமிருக்கும் இதற்குப் பெரிய கண்கள் உண்டு. இதன் நஞ்சு மிகுந்த தீங்கு படைத்தது.

நல்ல பாம்பிற்குப் பெயர்போன இடம் நம் இந்திய நாடுதான். இதன் அமைப்பை நம் கோயில்களிலுள்ள கற்றச்சுகளிலும் எகிப்தில்

உள்ள கற்றச்சுகளிலும் காணலாம். இஃது எவரையும் தாக்கும். இதற்குக் கடுஞ்சினம் வந்தால் துரத்திக்கொண்டு வந்து தாக்கும். இதனால் தானோ என்னவோ நம்மவர்கள் அஞ்சி இதனை வணங்குகின்றனர். அதுமட்டுமில்லாது சிவனுக்கு மாலையாகவும் அமைத்துவிட்டார்கள்.

பவளப் பாம்பு (Coral Snake):- இது பல வண்ணங்களில் இருக்கும். இதன் வண்ணத்தைப் பார்த்து, இஃதை அடையாளம் கண்டு கொள்ளலாம். இஃது அமெரிக்கப் பாலைநிலங்களில் மிகுதி. இது மிகவும் நஞ்சுடையது. ஆனால் இஃது இரையைத்தாக்கி உண்பதற்காகவே தன் நஞ்சைப் பயன்படுத்தும்.

விரியன் பாம்பு (Viper Snake):- இஃது இந்தியா, ஐரோப்பா இன்னும் மிகு வெப்பமுள்ள நாடுகளில் வாழ்கின்றது. இதன் நஞ்சு கொடுமையானது. இதற்கு இரண்டு நஞ்சுப்பைகளுண்டு. ஒன்று பழுது அடைந்துவிட்டாலும் மற்றதைப் பயன்படுத்தும். இதன் தலைக்குமேல் 'V' போன்ற குறி இருக்கும். இஃது ஏறத்தாழ இரண்டு அடிக்குமேல் நீளமிருக்கும். இது தீண்டினால் உடனே இறப்புதான்.

சாரைப் பாம்பு (Rattle Snake):- இதுவும் நஞ்சுள்ளது. இதன் வால் பகுதியிலுள்ள வளையம் போன்ற பகுதிகளால் நகரும் பொழுது 'சர, சர' என்று ஒலி உண்டாகும். இவ்வகைப் பாம்பில் ஆறு விரற்கடையிலிருந்து ஆறடி நீளமுள்ள பாம்புகளும் உண்டு. இவ் வகையில் மிகு நீளமுள்ளது காழகச் சாரை (Diamond-back rattle snake). எனும் வகையே! எனினும் இதனால் மிகுசிறப்புகள் ஏற்படவில்லை.

பல்லியினத்திலும் நஞ்சுடையவை உண்டு. இதில் 'பெருநச்சுப் பல்லி' (Gilamonster) என்னும் வகை மிகவும் கொடியது. இஃது ஏறத்தாழ மூன்றடி நீளமிருக்கும். இது மணற்பாங்கான மிகு வெப்ப முள்ள இடங்களில் இருக்கும். இதற்கு உறுதிவாய்ந்த தாடைகளும் கூர்மையான பற்களும் உண்டு. கீழ்த்தாடையில் நச்சூற்று உள்ளது. இது தன் இரையை நெடுநேரம் தன் தாடைகளால் அழுத்திப்பிடித்துக் கொண்டிருக்கும். சிறிய பறவைகள் முட்டைகள், பெரிய பூச்சிகள் ஆகியவற்றை உணவாகக் கொள்ளும். இது மெதுவாகத்தான் நகரும்.

பூச்சி உலகத்திலும் நச்சுப் பூச்சிகள் பல உண்டு. எடுத்துக் காட்டாகக் கொசுக்களை எடுத்துக் கொள்வோம். இவற்றில் ஆண்

கொசுவுக்கும் பெண் கொசுவிற்கும் உணவிலேயே வேற்றுமையுண்டு. ஆண் கொசு நிலைத்திணைகளின் சாற்றையுண்ணும். ஆனால் பெண் கொசு உயிரினங்களின் குருதியையே உண்ணும். தன் உறிஞ்சியை தோலுள் செலுத்திக் குருதியை உறிஞ்சும். உறிஞ்சும் பொழுது அரத்தம் உறையாமலிருக்க ஒருவகை சுரப்பு நீரைக் கொட்டும். இவ்வாறு கக்கும் நீரில் நச்சுக்காய்ச்சல் (மலேரியா) நுண்ணுயிரிகள் இருந்தால், கடிக்கப்பட்டவன் அந்நோயால் பீடிக்கப்படுவான். இவ்வாறு நோய்களை உண்டாக்கும் பூச்சிகள் பல உண்டு. பொதுவாகக் கறுப்பு ஈ கக்கற்கழிச்சல் (காலரா) என்ற நோயை உண்டாக்குகிறது. நீரில் வாழும் ஒருவகை வண்டு (Beetle) மிகுந்த நஞ்சுள்ளது. இது நீரில் வாழும் பூச்சிகளைக் கொல்லும். வளர்ந்த நிலையைவிட இது புழுப் பருவத்தில் இருக்கும்போது மிகுதியும் நஞ்சுள்ளது.

சிலந்திகள்:- சிலந்திகளில் ஏறத்தாழ 10,000வகைகள் உலகெங்கும் பரவியுள்ளன. ஒவ்வொரு வகைச் சிலந்தியும் ஒருவகையான நஞ்சைச் சுரக்கின்றது. சில சிலந்திகள் மாந்தர்களைக் கொல்லும் திறன் படைத்தவை. இவை மிகவும் கடுமையான வெப்ப நாடுகளில் இருக்கின்றன. "இத்தாலியச் சிலந்தி" (Italian Tarantule) கடித்தால் நரம்புத் தொடர்பான நோய் உண்டாகிறது. இது கடிப்பதால் ஒருவகை மயக்கமும் உண்டாகிறது.

இதைப் போக்குவதற்காகக் கடிபட்டவர்களின் உடம்பிற்குப் பல வகையான ஆட்ட அசைவுகளைக் கொடுக்க வேண்டும். இதற்காகவே "டாரன்டெல்லா" என்னும் நாட்டியத்தை உண்டாக்கியுள்ளனர். ஆசுத்திரேலியாவில் இன்னும் நஞ்சுள்ள பல சிலந்திகள் உண்டு.

கொடுக்கிகள்:- கொடுக்கால் கொட்டும் உயிரினங்கள் பல உள்ளன. குளவிகள், தேனீக்கள் இந்த வகையைச் சார்ந்தவையாகும். தேனீ மாந்தனை ஒரேஒரு முறைதான் கொட்டமுடியும். அவ்வாறு கொட்டிவிட்டு மீளும்பொழுது கொடுக்கை பிய்த்துக்கொண்டு செல்லும். இதனால் இதற்குத் தீங்கு ஏற்படும். ஆனால் பூச்சிகளை இதுபல முறை தாக்கும்.

தேள்கள்:- தேள்களில் 300 வகையுண்டு. கால்விரற்கடையிலிருந்து எட்டு விரற்கடைவரை நீளமுள்ளவையாக இருக்கும். வெப்பமான இடங்களில் மிகுந்திருக்கும். பகல் நேரங்களில் மறைந்துவாழும்.

இரவில் இரைதேட வெளிவரும். தன் முன்பாகத்தில் உள்ள இடுக்கிகளால் இரையை இறுகப் பற்றிக் கொள்ளும். பிடியிலிருந்து தப்ப முயன்றால் தன் கொடுக்கை முன்பக்கம் இழுத்துக் கொட்டும். ஆணும் பெண்ணும் சேருவதற்குமுன் ஆண் பெண்ணின் இடுக்கிகளைப் பிடித்துக் கொண்டு ஒருவகை நாட்டியமாடும். இறுதியில் பெண் ஆணையே உண்டுவிடும்.

வாத்தலகு பிளேடைப்பசு (Duckbilled playtypus):- இஃது ஆசுத்திரேலியாவில் உள்ளது. இது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இதன் குஞ்சுகள் தாயின் பாலை உண்டு வாழும். வளர்ந்த உயிரி நீரில் புழு பூச்சிகளை உண்டுவாழும். பின்னங்கால்களில் ஒரு கொடுக்குப் போன்ற பாகம் நீட்டிக் கொண்டிருக்கும். இப்பாகத்திலிருந்து ஒரு குழாய் நச்சுப் பைக்குச் செல்லுகின்றது. இதன் இனப் பெருக்க நாட்களில் (ஆகஃச்டு முதல் செப்டம்பர்வரை) இதன் நச்சு மிகவும் திறன் வாய்ந்தது. ஏப்ரல் மாதத்தில் இதன் நஞ்சு ஏதமற்றது.

சில மீனினிங்கள்கூட நஞ்சுடையவை. இவ்வகையில் 'சிங்ரே' (Sing-ray) என்ற மீனில் வேல் போன்ற முனையொன்று உண்டு. இஃது ஏறத்தாழ 14 அடி நீளம்கூட இருக்கும். இது வாலினால் மற்ற உயிரிகளை அடித்துக் கொல்லும். ஆகையால் இவற்றை மீனவர்கள் 'கடற்பேய்கள்' என்று கூறுவது உண்டு. இதுபோல் நஞ்சுள்ள மற்றவை கடல் தேள், 'டிராகன்' மீன் முதலியவையாகும்.

குழை மீன் (Jelly Fish):- கடலோரங்களில் கூழ்போல் நீண்டிருக்கும். இவ்வகை மீன்இனத்தை நாம் பார்க்கலாம். இது நீரில் இருக்கும்பொழுது பல வடிவங்களில் (தலைக்கவிப்பு, குடை, கோளம், தட்டு போல்) இருக்கும். இவற்றிற்கு மிக நுண்ணிய கொடுக்கு நுண்ணறைகளுண்டு. அவை உடம்பின் மீது பட்டால் வீக்கமும் எரிச்சலும் உண்டாகும். இதில் சிலவகையானவை தம் இரைமீது நஞ்சைச் செலுத்தும். இரை சில மணித்துளிகளில் இறந்துவிடும். இன்றும் இது கடலில் நீராடுபவர்களுக்கு மிகுந்த தீங்கைக் கொடுக்கிறது.

சிலவகை உயிரினங்கள் வெறுப்பூட்டும் நாற்றத்தை உடைய நீர்மங்களைக் கொண்டு தங்களை காத்துக் கொள்கின்றன. ''சங்க்''(Shunk) என்னும் உயிரினம் தன்எதிரிகளிடமிருந்து காத்துக்கொள்ளத் திரும்பி நின்று தன் வாலைத்தூக்கி ஒருவகை நச்சு நீரைப் பீச்சி அடிக்கின்றது

இந்த நீரை மிகத்தொலைவிற்குப் பீச்சி அடிக்கமுடியும். இந் நீரின் நாற்றம் பொறுக்காமல் மற்ற உயிரினங்கள் ஓடிவிடும்.

நீர்மூழ்கி மீன் (Torped Fish):- மாந்தர்கள் மின்சாரத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளும் முன்பிருந்தே இயற்கை உலகில் இவ்வாற்றலைப் பல உயிரினங்கள் பயன்படுத்தி வருகின்றன. தென் அமெரிக்காவில் பல வகையான மின்சார மீன்கள் இருக்கின்றன. ஆசியாவின் பல இடங்களில் பெரும் ஆறுகளில் இவை இருக்கின்றன. இவற்றின் வால்களின் முனையில் மின்சாரத்தை உண்டாக்கும் கருவி உள்ளது. இதன் மின்சாரத்தாக்கு மாந்தருக்கு நீண்ட நாள் இருக்கும் வலிப்பை உண்டாக்கவல்லது. தற்காலத்தில் செய்த ஆராய்ச்சிகளின் மூலம் மின்சார மீன்கள் தங்களின் மின்சார ஆற்றலைக் கொண்டு தாங்கள் செல்லும் பாதையில் உள்ள தடுப்புகளை அறிந்துகொள்ளும் என்று கண்டு உள்ளனர்.

இவ்வாறாக இயற்கையில் உயிரினங்கள் தற்காப்பிற்காகவும், தாக்குவதற்கும், தம்இரைகளைப் பிடிப்பதற்கும் வேதியல் பொருள்களை (நஞ்சை)ப் பயன்படுத்துகின்றன என்று அறிகின்றோம். O

தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

மக்களவை

ஓய்வு பெற்ற ஆசிரியர் நிலை.

ஐயன்மீர்,

தொடக்கப் பள்ளிகள், உயர்பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர் பலர் ஓய்வுபெற்ற பின்னர் அடையும் தொல்லைகள் அளப்பில. ஏனெனில், வாழ்க்கைச் செலவுக்குரிய வருவாய் இன்மையே.

இக்காலத்தில் ஆசிரியத் தொழில் செய்பவர் ஊதியத்தைக் கொண்டு குடும்பம் நடத்துவதே மிகவும் அரிதாயிருக்கிறது. பிற்கால உதவிச் சேமிப்பில்(P F.)கிடைக்கும் சிறு தொகையைப் பிள்ளைகளின் திருமணத்திற்கோ, அன்றி, குடியிருக்க இல்லம் அமைப்பதற்கோ, அன்றி, குடும்பத்தின் நன்மை, திண்மைகட்கோ செலவிட்டு விடுகின்றனர்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கட்குக் கொடுக்கப்படும் உதவி ஊதியமோ (Pension) ஒரு திங்கள் சிற்றுண்டிச் செலவுக்கே பற்றுது.

திங்கள் ஒன்றுக்கு உருபா நூற்றறுபது ஊதியம் பெற்றவர்க்கு உதவித்தொகை உருபா இருபதும், இருநூற்றுமுப்பது உருபா பெற்றவர்க்கு முப்பத்தைந்து உருபாவும், முந்நூற்றறுபது உருபா ஊதியம் பெற்றவர்க்கு அறுபத்திரண்டரை உருபாவும் அளிக்கப்படுகிறது. இன்றைய வாழ்க்கைச் செலவு புள்ளி விளக்கப்படி இத்தொகை ஒருவருடைய உண்டிச் செலவுக்கே போதாது.

எனவே, ஓய்வுபெற்ற ஆசிரியர் பலர் உருக்குலைந்து, உளம் நொந்து, முன் பழகிய பலரைக்காணவும் நாணி நடைப்பிணங்களாக உலவுகின்றனர். முன்னோர் வைப்பு உள்ளோர் ஒருசிலர் மட்டுமே நன்னிலையில் இருக்கலாம் ஆனால், ஊதியத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்தியவர் பாடு இலம்பாடுதான்.

ஐம்பத்தெட்டு அல்லது அறுபது அகவைக்குமேல் ஓய்வு பெற்ற காலத்தில் என்ன தொழில் செய்து பிழைக்க முடியும்? ஓய்வு பெறுதல் என்பதே வேலைசெய்யும் வலிமையில்லாத நிலையில்தானே? ஓய்வுபெற்ற பின் அமைதியாகக் கவலையின்றி வாழவேண்டிய ஆசிரியர்கள் அலைக்கழிவதை நோக்கின் அலுவலில் இருக்கின்ற ஆசிரியர்கட்கும் பிற்கால நிலைபற்றிய அச்சம் உண்டாகிறது. ஆகவே, திறமை மிக்க பலர் இவ் ஆசிரியர் பணியை மேற்கொள்ள விரும்பாது பல்வேறு வேலைகள் தேடிப் பறக்கின்றனர்.

ஆசிரியத் தொழில் மிகப் புனிதமானது; உயர்ந்தது; சிறந்தது; தெய்வத்தன்மைவாய்ந்தது என்றெல்லாம் வாயளவில் கூறுகிறார்களே யன்றி அத்தகு பணியாற்றியோர் ஓய்வு பெற்றபின் அடையும் சீர்கேட்டை எண்ணிப் போக்க முன்வருவார் சிலர்.

அரசினர் அலுவல்களில் இருக்கின்ற நான்காந்தரப் பணியாளர்கட்குக் கிடைக்கின்ற உதவி ஊதியத்தின் அளவுகூட ஓய்வு பெற்ற ஆசிரியர்கட்கு இல்லை. மேலும், அரசினர் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கட்கு அளிக்கும் உதவி ஊதியத்தின் அளவு வேறு, தனிப்பட்ட நிறுவனங்களில் வேலைசெய்யும் ஆசிரியர்கட்கு அளிக்கப்படும் உதவி ஊதிய அளவு வேறு. ஏன் இந்த வேறுபாடு? ஒரே துறையில் பணியாற்றுபவர்க்குள் ஓய்வு ஊதிய வேறுபாடு இருப்பது நனியும் கவலற்குரியதே, வாழ்க்கைச் செலவுகளும் பிற தேவைகளும் எல்லார்க்கும் ஒன்றுதானே? அரசினர் அலுவல்களில் இருக்கின்றவர்கட்கு அளிக்கப்படுகின்ற உதவி ஊதியம் போன்று ஏனைய தனி நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கட்கும் அளிப்பதே முறையும் நேர்மையுமாகும்.

ஆசிரியர்களுடைய கான்முளைகள் சிலர் அலுவலில் இருப்பர். ஆயினும், அவர்கள் கையை எதிர்நோக்கி வாழ்வது இக்காலத்தில் இயலாது. ஏனெனில், அவர்களின் மனைவி மக்களைப் பேணவே அவர்கள்

பெறும் ஊதியம் போதாது அவர்களே பற்றுக்குறையால் துன்புறும் பொழுது மற்றோரைக் கவனிக்க வாய்ப்பேது? ஆகவே, எவ்வகையினும் ஓய்வுபெற்ற ஆசிரியரின் நிலை அவல நிலையே.

நாட்டின் வருங்கால நற்குடி மக்களை உருவாக்கும் நற்பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் உணவுக்கு உளைந்து உருக்குலையும் நிலையை உண்டாக்காது. ஓய்வு பெற்ற பின்னர் மனநிறைவோடு வாழத்தக்க வாறு உதவி ஊதியம் அளிக்குமாறு வேண்டுகின்றேன். இதில் ஊழி யம் செய்தகாலம், அவர் பெற்ற ஊதியம் முதலியனவற்றைக் கருதிக் குறைக்காது ஒருவர் வாழ்க்கைச் செலவுக்குப் போதிய அளவாவது ஊதியம் கொடுப்பதே உகந்தது.

மேலும், ஓய்வுபெற்ற ஆசிரியர்க்குச் சேரவேண்டிய பிற்கால உதவிப் பணத்தை (P.F.) உடனடியாகக் கொடுத்து, உதவி ஊதி யத்தை இரண்டொரு திங்களில் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுவ தும் இன்றியமையாதது.

இன்று தமிழக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள தி. மு. க. அமைச்சரவை மேற்கூறியவற்றை நன்கு ஆய்ந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் மன நிறைவுடன் வாழத்தக்கவகையில் உதவி ஊதியம் அளித்து உதவும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

திருத்துறைப்பூண்டி,
௨௩–௫–'௬எ.

இங்ஙனம்,
வி. பொ. பழனிவேலன்.

உலகை யாளும் தமிழ் எண் வடிவங்கள்

ஐயா,

இஞ்ஞான்று அரபி எண் வடிவங்கள் என்று வழங்கப்பெறும் (1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10) எண்கள் தமிழ் எண் வடிவங்களே என்றும், அவை தமிழ் எண் வடிவங்களினின்றுப் (க, உ, ௩, ௪, ௫, ௬, எ, அ, ௯, ௰) திரிந்தவை என்றும் பர். மு. வரதராசனுர் அவர்கள் தம் "மொழி வரலாறு" என்னும் நூலின் இறுதிக் கட்டுரையில் விளக்கி யுள்ளார்.

'1........10' எண் வடிவங்களை அரேபியர் தங்களுடையவை யல்ல என்று கூறுவதும், அவ்வடிவங்களின் மீது வேறு எம்மொழி

யாளரும் உரிமை பாராட்டாமல் இருப்பதும், அவை தமிழ் எண் வடிவங்களோடு ஒப்புமையுடையனவாக இருத்தலும் அவை தமிழ் எண் வடிவங்களே எனத் துணிந்து கூறப்போதிய சான்றுகளாம்.

தமிழன் பெற்று, வறுமையால் வாடுங்கால்விற்ற குழந்தையினைப் பின்னொருகால் கண்டும் அடையாளம் அறிந்துகொள்ளாத தாய்போல் உலகிற்குத் தந்து தன்னிலை தாழ்ந்தான்.

'தென்மொழி' க, உ, ங, ச முதலிய எண் வடிவங்களையே தமிழ் வடிவங்களாகக் கருதிப் பயன்படுத்தி வருகிறது. இனியாவது இக் கருத்தினை ஆய்ந்து, க, உ, ங முதலியவற்றின் திரிபு வடிவங்களாகிய 1, 2, 3 ....10 எனப்படும் எண்களை வழக்கிற்குக் கொணர வேண்டுகிறேன்.

1, 2, 3 முதலிய எண் வடிவங்கள் உலகெலாம் உலவும் பேறு பெற்றவை என்பதோடு கணிதக் கலைத்துறைக்கு மிகமிக ஏற்றவை என்பது வெள்ளிடைமலை.

குறிப்பு:- இதனைப் பற்றி ஆய்ந்து தென்மொழியில் விளக்கம் எழுதினால் பலரும் பயன் பெறுவர்.

தமிழ்ச்செல்வி நிலையம்,
சாமிமலை (அஞ்சல்) தஞ்சை மாவட்டம்.

அன்பன்,
குயில்.

சீவன் பிரகாசா?

அன்புடையீர்! வணக்கம்.

தஞ்சையில் வாணாள் காப்பீட்டுக் கழகக் கட்டிடம் ஆறேகால் இலக்க உருபாச்செலவில் கட்டப்பட்டு அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகத்திற்குக் கழகத்தினர் இட்டுள்ளபெயர் 'சீவன் பிரகாசா' (ஜீவன் பிரகாஷ்). தமிழகத்தில், அதுவும் தஞ்சையில் உள்ள ஓர் அலுவலகத்திற்கு இந்திப் பெயரை ஏன் வைக்கவேண்டும்? இஃது எதைக் காட்டுகின்றதென்றால் தென்னகத்தில் வடவர் தாங்கள் ஊன்றிய கால்களை நன்றாகப் பதித்துக் கொள்ளுகின்றனர் என்பதையே. அக் கட்டிடத்தை திறந்து வைத்தது பெருமதிப்பிற்குரிய முன்னாள் தமிழ் நாட்டு அமைச்சர்களில் ஒருவர் நினைக்கும் பொழுதே நெஞ்சம் பற்றி எரிகின்றது.

மங்கள இல்லம்
நீடாமங்கலம்

இங்ஙனம்,
ந. பாலசுப்பிரமணியம்.

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னாலென்ன?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு!

இலக்கிய அன்றைக் காய்ச்சியர்!

புலவர். தி. ந. அறிவுஒளி.

அம்மாமித் தமிழெழுதி 'ஆகா!' வென்பார்!
அறிவில்லாத் தமிழரதை வாங்கிக் கற்பார்!
செம்மைசேர் இலக்கியத்தின் சீரைக் கொன்றே
சிறப்பாருந் தனித்தமிழை வேண்டா வென்பார்!
கைம்மைநேர் புலமொழியைக் கொச்சைப் பேச்சைக்
மடமையினாற் காதலிப்பார் காதை தீர்ப்போம்!
நம்மேதை மறைமலையார் கொள்கை போற்றி
நலிவில்லாத் தமிழ்வளர்ப்போம்! நன்மை செய்வோம்!

அங்காடித் தமிழுக்கே ஆற்றல் உண்டாம்!
அரைகுறைகள் உளறிடுதல் ஆர்வச் செண்டாம்!
தங்காத மனத்தவிப்பு சால்பில் செய்கை
தமிழ்க்கதையின் கருவாகிச் சாகும்! போகும்!
இங்கிவற்றை எழுதியவர் தம்முள் 'மன்னர்'
எவரென்றே திறனாய்வாம்! ஏந்தல் நால்வர்
பொங்குபுதுத் தமிழ்வளர்த்தார் என்பார்! பூப்பார்!
புழுக்களெனத் தமக்குள்ளே பூசல் செய்வார்!

முறையாகத் தமிழ்கல்லார் மூத்தார் வீணே!
முதுமறையோ தமிழ்ப்பண்போ முற்றும் காணார்!
குறையாகப் பிறமொழியைக் கொத்தித் தின்பார்!
குறுமதியால் வடமொழிக்குக் 'கும்பி' விற்பார்!
நிறையான இலக்கணத்தை நேரில் நோக்கா
நிலைகெட்ட தறுதலைகள் ஊரில் கூடி
மறைவாகப் புகழ்பேசி மாய்வார்! காய்வார்!
மதிகெட்ட திறனாய்வின் மாண்பே! மாண்பாம்!

"அழிக்க வேண்டும்"

தமிழ்நாடன், நாகமங்கலம்.

உழைப்பவர்க் கில்லா உணவுப் பொருள்களை
உடனே பறித்திட வேண்டும் – அதை
உண்டு களித்திட வறுமை போக்கிட
உரியோர்க் களிக்கவும் வேண்டும்.
இழைப்பவர்க் கில்லா மாடகூ டங்கள்
ஏழைக் களித்திடல் வேண்டும் – அதனை
எதிர்த்துமுன் நிற்பவர் மறித்துப் பேசுவர்
எலும்பை முறிக்கவும் வேண்டும்.

உணவுப் பொருள்களைப் பதுக்கி வைப்பவர்
உடலைக் கிழித்திடல் வேண்டும் – அதை
உற்ற விலைக்கே விற்று உழைப்பவர்
உளத்தை நிறைக்கவும் வேண்டும்.
தினவுடல் எடுத்துத் திரியுங் காமரின்
தீங்கொ ழித்திடல் வேண்டும் – அவர்
திருந்தா விட்டால் திளைக்கு முடலினைத்
தீர்த்துக் கட்டவும் வேண்டும்.

தமிழை மிதித்துப் பிறமொழி பேணிடும்
தன்மை மாறவும் வேண்டும் – அதைத்
தாக்கிப் பேசிடும் தருக்கர் வாய்தனைத்
தைத்து மூடவும் வேண்டும்.
தமிழை மதித்துத் தாய்மொழி பேணிடும்
தன்மை வளரவும் வேண்டும் – அதைத்
தரக் குறைவாகப் பேசுவர் நெஞ்சைத்
தகர்த்த ழித்திடல் வேண்டும்!

பாரதிதாசப் பாவேந்தன்! பட்டுக்கோட்டை-இல. இராசேந்திரன்

தேனுக இனித்தாலும் தமிழ் நமக்குத்
தோதுபடா தென்றுரைத்த பேதை தெ. போ
மீனுட்சி சுந்தரத்தைப் போன்ற வர்கள்
முதுகெலும்பை இடம்மாற்றி வைக்க எண்ணி
நாணுயிற் றெனஅரிமா எழுந்தாற் போல
நாவேந்தன் பாரதிதா சன்எ ழுந்தான்;
வானுகத் தன்புகழை வளர்த்துக் கொண்டான்!
வாலறுந்த பட்டம்போல் வீணர் வீழ்ந்தார்!

தென்சொல்லில் வடசொல்லின் சாயல் ஏற்றித்,
தெரிகிறதா இந்தச்சொல் வடசொல் என்ருர்
தன்மானம் அற்றவர்கள் சிலபேர்! 'வேட்டி'
தேன்தமிழே ஆனுலும் 'வேஷ்டி' என்றே
இன்னெருவன் மொழியாக உருவம் மாறும்!
இந்தநரிச் செயலெல்லாம் என்ஆ சானின்
முன்னுலே, முளைக்காத வித்தா யிற்று!
மூத்ததமிழ்க் குடிஅவனுல் வளர்ந்தோங் கிற்று!

வெள்ளைமனத் தால்இந்தப் பெருவை யத்தில்
விரிந்தபுகழ் பெற்ருேன்;நற் சீர்தி ருத்தக்
கொள்கையினுல், வேரற்ற மடமைக் கெல்லாம்
குழிதோண்டிப் புதைத்திட்டோன்; கைம்பெண் ணுக்கும்
உள்ளமுண்டு காதலுண்டு வாழ்வுண் டென்ருேன்'
உணர்ச்சிநரம் புக்கெல்லாம் விரைவு தந்து
தள்ளாத முதியவரை இளைஞ ராக்கித்
தமிழ்காக்கச் செய்தவனும் பாவேந் தன்ருே

"பாட்டெழுதல் பணம்காசைச் சேர்த்தற் கன்று;
பைந்தமிழர் நெஞ்சத்தில் உணர்வைத் தேக்க!
நாட்டுமக்கள் நலம்காக்க" எனும் கருத்தில்
நடந்ததவன் பெருவாழ்வு; "தென்ன கத்தை
வாட்டுகின்ற பசிநீங்க வேண்டு மானுல்,
வடக்கனுக்கு வால்பிடித்தல் தொலைதல் வேண்டும்
பூட்டுமனத் தார்உறவு நீங்க வேண்டும்"
பாவேந்தன் காட்டும்வழி இதுவே கண்டீர்!

நமக்கெல்லாம் நல்வாழ்வு வாய்க்கும் வண்ணம்
நலம்மிக்க செயல்செய்தோன்; நாடு காத்தோன்;
தமிழ்வாழத் தான்வாழ்ந்த மீசைக் காரன்;
தக்காரை மெச்சுகின்ற தகவு பெற்ருேன்;
உமிபோலும் வண்ணத்தான்; காழ்த்த தோளான்;
உரம்மிக்க நெஞ்சத்தான்; தமிழில் மூத்தான்!
நமைவிட்டு மறைந்திட்டான்; மறைந்த பின்னே
நாம்நாளும் சாகின்ருேம்; காப்பார் யாரே!

பொருள் வாழ்க்கை.!

இரும்பொறை – தேனி.

படித்திருந்தும் அரசினரின் அலுவலில் நீ இருந்தும்
பலர்உன்போல் பொருள்சேர்க்கும் பான்மையறிந் திருந்தும்
பிடிக்கவில்லை வேலையென விட்டதென்னே? என்ருர்.
பலர்துடிக்கச் சிலர்கூடி வீண்பொருளைச் சேர்க்க
அடிக்குமொரு கொள்ளையிஞல் அல்லலுற லன்றி
அமைதியுறல் வேண்டும்என் நெஞ்சம்எனச் சொல்ல
இடிக்குரலில் சிரிக்கின்ருர்; இவன்போலும் நாட்டில்
ஏமாளி எவனுண்டே எனச்சொல்லித் தானே!

நோகாமல் நிழலிருந்து நினைத்ததெலாம் உண்டு
நெகிழாத புத்தாடை கட்டிமகிழ்ந் திருக்கப்
போகாத தேன்?என்று கேட்பார்க்கு யானும்
பெருங்காற்று மழைதன்னில் பிறர்போல நாளும்
வேகாத கூழுண்டு வெயிலிலலைந் தாலும்
வாழ்கின்றேன் மகிழ்வாக, தாழ்வில்லை என்றேன்
சாகாமற் சாகின்ற இவன்பேசும் வாழ்வும்
சரியாமோ! எனச்சொல்லிச் சிரிக்கின்ருர் அவரே!

பொருள்நாடி வீணுகப் பலபேரைத் தாழ்த்திப்
பொய்பேசி வாழ்தற்கு இசைகின்றேன் அல்லேன்;
அருள்நாடி வாழ்கின்றேன் அதுவன்றி யானும்
அவர்போலும் பொருள்தேடத் தெரியாம லில்லை
மருள்நீங்க மெய்யான பொருள்நாடு கின்றேன்
மனமில்லை பொய்யான பொருள்மீதில் என்றேன்
இருள்தானுன் வாழ்வென்றே இளித்தாரைக் கண்டு
என்னுள்ளம் கவல்கின்ற தவர்க்காக வென்றே!

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனுல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனேவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:
பெ. இரத்தினசாமி, ஆசிரியர்,
கரியாபட்டினம், திருத்துறைப்பூண்டி, கூற்றம், தஞ்சை மாவட்டம்.

பொட்டல்-மரஞ்செடியற்ற, நீர் நிலையில்லாத பரந்த நிலப்பரப்பு.
புலம்-மழைநீர் தேங்கிய ஏரி போன்ற பெரிய நீர்ப்பரப்பு.
வெப்பல்-மரஞ்செடிகொடிகளடர்ந்த நீர்ப்பரப்பிற்கு இடையில் காணப்படும் நிலப்பரப்பு.
தூரி-அடர்ந்த காட்டினுள் இடையில் செல்லும் சிறிய நடைபாதை.
பள்ளயம்-(பள்ளாயம்) நீளமும், அகலமும், குழிவும் உள்ள உருவில் அமைக்கப்பட்ட இலையில் நிறைந்த அளவு போடப்படும் சோறு.
கைச்சால்-(கச்சால்)ஈர்க்கில், அல்லது மரக்குச்சி-ஆகிய இவற்ருல் அமைக்கப்பட்டு, நீரில், கையால் இழுத்து மீன்பிடிக்க உதவும் கருவி.
பசுக்கு-இரண்டு மரக்கால். சரவை-தொந்தரவு (துன்பம்).
வண்டவாளம்-நடத்தை(நடத்தையைக்காட்டும் செயல்).
சறுவல்-இறக்கம்(மேட்டிலிருந்து கீழ்நோக்கிச் சென்று முடியும் இடம்)
மவுட்டியம்(மௌட்டியம்)-நன்மை தீமைதெரியாத்தன்மை.
குச்சித்தியம்-பொருமை.
மாராயம்-ஒன்றையே மனதில் குறியாய் வைத்துக்கொண்டு அதையே திரும்பத் திருமப சொல்லுதல்.
கவுல்(கௌல்)-அமைதி-குருதிநாற்றம்.
கமுக்கம்-ஒருவரும் அறிந்துகொள்ளமுடியாத நிலை.
கவடு-செய்ய முடிந்ததை, செய்யமுடியாததுபோல் நடித்தல் (தெரிந்ததை சொல்லவேண்டிய இடத்திலும் சொல்லாமல் இருக்கும் தன்மை)
இரவணம்-உப்பு.

வம்மை-பொருள், தானியம், இதரவகை ஆகியவற்றில் சுற்றத் தார்க்கு மனமுவந்து கொடுக்கும் சீர்.
ஆவை-இல்லங்களில் நடைபெறும் நல்லவையும், தீயவையுமான, நிகழ்ச்சிகள். காணியாச்சி-சொந்த நிலம்.
கரச்சல்-குழப்பம். வாண்டு-இளம் பருவம் (இளமைப் பருவம்)
தொம்பை-வயிறு. கரிசனம்-அக்கறை (சிரத்தை)
தாவந்தரியம்-பரிதவிப்பு. கேரோரம்-நிலை தடுமாற்றம்.
முடை-குறைவு (தாழ்வு). கெச்சம்-இழிவு.
திட்டாணி-களிமண்ணினால் செய்யப்பட்டு, நெல் குவிக்கப் பயன்படுத் தும் கருவி. திட்டாந்திரம்-ஏறக்குறைய சரியாக.
சொகுசு-நாகரீகம். அசுப்பு-திமிர். கெலிப்பு-சிரிப்பு.
கச்சடை-அசடு (அழுக்கு). புணசல்-வீண்வம்பு.

கீழே உள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.
வெ. சேசாசலம், அ. வ. அ. கல்லூரி. மயிலாடுதுறை.

அம்பாரம்-தானியக் குவியல். ஒப்பிடி-விளைந்த தானியத்தை, வீட்டிற் குக் கொணரும்வரை, களத்தில் நடக்கும் வேலை.
தாமிணி-வரிசையாக மாடுகள் கட்டுங் கயிறு.
தொராய்-ஓட்டுக்குக் கீழே, அருகருகே வைக்கப்பட்டிருக்கும் நீண்ட, பருத்த மரம். தொண்டான்-கவலை இறைக்கும்போது பயன் படும், தோலாலான நீரிறைக்கும் கருவி.
படை-அறுத்த வரகுக் கட்டுகளின் குவியல்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்
சோம. தேவராசன், அறி. இ. குறிஞ்சிப்பாடி.

மாராக்கு(மாராப்பு)-பருவப்பெண்கள் அணியும் மேலாடை.
சுள்ளாங்கறி-பலகாய்கறிகளைச்சேர்த்துச் சமைத்தகறி. ஈண்ட-நிறைய
புட்டான்-ஓலைப்பெட்டி. கெந்து-தூக்கி எறி.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்: அ. குணசேகரன்,
குருவிக்கரம்பை,(அஞ்சல்) பட்டுக்கோட்டை(வட்டம்)
தஞ்சை மாவட்டம்.

கரண்டான்-சுண்ணும்பு வைக்கும் சிறு கூடு. தளங்கடி-கதிரிலி ருந்து அடித்து நீக்கிய நெல். சீந்தி-கழனியில் கதிர் முற்றியபிறகு தண்ணீரை வடிக்கக் கதிர்களை ஒதுக்கி வைத்தல்.
பொன்னி-உழுகின்ற பொழுது ஏற்படுகின்ற சிறுமேடு.
குரங்குமட்டை-தென்னைமட்டையின் அடிப்பாகம்.
குத்தனை-தண்ணீரைத் தேக்கி வைக்கும் அணை.
ஔாரம்-புல்லைச் செதுக்க பயன்படுத்தும் கருவி.
பந்தயம்-தானியங்களை சேமித்து வைக்கும் கருவி,
அடுப்புப் புடை-அடுப்பின்மேல் பாகம். மங்கு-குழிவான தட்டு.

வம்மை–பொருள், தானியம், இதரவகை ஆகியவற்றில் சுற்றத் தார்க்கு மனமுவந்து கொடுக்கும் சீர்.
ஆவை–இல்லங்களில் நடைபெறும் நல்லவையும், தீயவையுமான, நிகழ்ச்சிகள். காணியாச்சி–சொந்த நிலம்.
கரச்சல்–குழப்பம். வாண்டு–இளம் பருவம் (இளமைப் பருவம்)
தொம்பை–வயிறு. சுரிசனம்–அக்கறை (சிரத்தை)
தாவந்தரியம்–பரிதவிப்பு. கேரோரம்–நிலை தடுமாற்றம்.
முடை–குறைவு (தாழ்வு). கெச்சம்–இழிவு.
திட்டாணி–களிமண்ணினால் செய்யப்பட்டு, நெல் குவிக்கப் பயன்படுத் தும் கருவி. திட்டாந்திரம்–ஏறக்குறைய சரியாக.
சொகுசு–நாகரீகம். அசுப்பு–திமிர். கெலிப்பு–சிரிப்பு.
கச்சடை–அசடு (அழுக்கு). புணசல்–வீண்வம்பு.

கீழே உள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.
வெ. சேசாசலம், அ. வ. அ. கல்லூரி. மயிலாடுதுறை.

அம்பாரம்–தானியக் குவியல். ஒப்பிடி–விளைந்த தானியத்தை, வீட்டிற் குக் கொணரும்வரை, களத்தில் நடக்கும் வேலை.
தாமிணி–வரிசையாக மாடுகள் கட்டுங் கயிறு.
தெராய்–ஓட்டுக்குக் கீழே, அருகருகே வைக்கப்பட்டிருக்கும் நீண்ட, பருத்த மரம். தொண்டான்–கவலை இறைக்கும்போது பயன் படும், தோலாலான நீரிறைக்கும் கருவி.
படை–அறுத்த வரகுக் கட்டுகளின் குவியல்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்
சோம. தேவராசன், அறி. இ. குறிஞ்சிப்பாடி.

மாராக்கு(மாராப்பு)–பருவப்பெண்கள் அணியும் மேலாடை.
சுள்ளாங்கறி–பலகாய்கறிகளைச்சேர்த்துச் சமைத்தகறி. ஈண்ட–நிறைய
புட்டான்–ஓலைப்பெட்டி. செந்து–தூக்கி எறி.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்: அ. குணசேகரன், குருவிக்கரம்பை,(அஞ்சல்) பட்டுக்கோட்டை(வட்டம்) தஞ்சை மாவட்டம்.

கரண்டான்–சுண்ணும்பு வைக்கும் சிறு கூடு. தளங்கடி–கதிரிலி ருந்து அடித்து நீக்கிய நெல். சீந்தி–கழனியில் கதிர் முற்றியபிறகு தண்ணீரை வடிக்கக் கதிர்களை ஒதுக்கி வைத்தல்.
பொன்னி–உழுகின்ற பொழுது ஏற்படுகின்ற சிறுமேடு.
குரங்குமட்டை–தென்னைமட்டையின் அடிப்பாகம்.
குத்தனை–தண்ணீரைத் தேக்கி வைக்கும் அணை.
ஔாரம்–புல்லைச் செதுக்க பயன்படுத்தும் கருவி.
பந்தயம்–தானியங்களை சேமித்து வைக்கும் கருவி,
அடுப்புப் புடை–அடுப்பின்மேல் பாகம். மங்கு-குழிவான தட்டு.

குறைந்த படிகளே கையயம் உள்ளன.

O அரிய, இனிய தனித்தமிழ்க் களஞ்சியம்!

O அறிவியல் தொகுப்பு!

தென்மொழித் தொகுப்பு

சுவடி. 4

O அழகிய கட்டடம்.

ஒவ்வொன்றும் பதிவஞ்சல் செலவுடன்

விலை உருபா: 12.

O தேவைக்கு முன்னதாகவே எழுதுங்கள்.

தென்மொழி

கடலூர்-1.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.